விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 06 சனிக்கிழமை (20.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 152

# பளையில் நேற்று பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு



## படையினர் குவிக்கப்பட்டு தேடுதல்; பதற்றம்

(பரந்தன்) பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சார் வெளிப்பகுதியில் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு பெருமளவான இராணுவத்தினர், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு பெரும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனால் அப்பகுதியில் பெரும் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டிருந்தது. (04-ம் பக்கம்)

## யானை தாக்கி சிறுமி பலி!

(கல்கிரியகம)

அநுராதபுரம், கல்கிரியகம பகுதியில் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி சிறுமியொருவர் பரிதாபகரமாக உயிரிழந்த நிலையில் ஒன்றரை வயது குழந்தை உட்பட இருவர் படுகாயமடைந்துள்ள 24

## கண்ணாடியிலான வழிபாட்டுத் தலம்

(மிரிஸ்வத்த)

கம்பஹா, மிரிஸ்வத்த ஸ்ரீ சுதர்சன தர்ம நிகேதனவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்றுமாடி கண்ணாடி வழிபாட்டுதலத்தின் திறப்பு விழா ஜனாதிபதி 24

## எனது மகனும் சைட்டத்தில்!

(கொழும்பு)

தனது மகனும் சைட்டம் தனியார் வைத்தியக் கல்லூரியில் கல்வி கற்றுவருவதாக நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் 04

## கனரக வாகனத்துடன் மோ.சைக்கிள் விபத்து

### குடும்பஸ்தர் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

கனரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்துச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் கோப்பாய் கைதடி வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் வல்வெட்டித்துறையை சேர்ந்தவரும் நீர்வேலியில் மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையமொன்றின் உரிமையாளருமான சபாபதிப்பிள்ளை ரட்ணகோபால் என்பவரே உயிரிழந்தவராவார்.

கைதடியில் உள்ள உற 04

## மன்னார் வந்த ரணிலுக்கு கறுப்பு கொடி எதிர்ப்பு


24

## இந்தியாவுக்கு எதிர்ப்பில்லை!

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி இந்தியாவுக்கு எதிர்ப்பில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

எனினும் அரசாங்கம், 04

## வீடொன்றில் கசிப்பு மீட்பு

கரவெட்டி யாக்கரு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து ஐந்து போத்தல் கசிப்பும், கோடாவும் மீட்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் நெல்லியடி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் படி அங்கு சென்று கசிப்பையும், கோடாவினையும் மீட்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரையும் கைது செய்துள்ளனர். (செ-60)

## ரூ.305 மில்.நிதி ஒதுக்கீட்டிலான மன்னார் மாவட்ட செயலக கட்டடம் பிரதமரால் திறப்பு


24

## முப்படையினரை பலப்படுத்துவேன்

### போர் வீரர் நிகழ்வில் ஜனாதிபதி உரை



(கொழும்பு)

விமர்சிப்பவர்கள் எதனை கூறினாலும் தேசிய பாதுகாப்பு தொடர்பான பொறுப்புக்களில் முப்படையினரைப் பலப்படுத்தும் செயற் 24

## பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய வரைபும் சிக்கலானது!

### மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு



(ஜெனிவா)

இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு வரைபு, எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி கைது செய்யப்பட்டவர்களை சிறைகளில் அடைக்கும் நடவடிக்கையை ஊக்குவிக்கும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு வரைபின் மூன்றாவது நகலுக்கு கடந்த மே 3-ம் திகதியன்று இலங் 04

## நினைவேந்தலை அனுஷ்டித்த 8 தமிழ் ஊழியர்களை பணி நீக்கிய நிறுவனம்!

(வவுனியா)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டித்த 8 தமிழ் ஊழியர்களை தென்பகுதியைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று பணி நீக்கம் செய்துள்ளது.

வன்னியில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தின் காரணமாக அதில் சிக்குண்டு உயிரிழந்தவர்கள் நினைவாக நேற்று முன்தினம் வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் தமிழர் தேசம் எங்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் பெரும் உணர்வெழுச்சியுடன் 04

# மகிந்த, கோத்தா தலைமையில் போர் வெற்றி கொண்டாட்டம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் இன்று போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

இதன்படி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் படைவீரர்களின் வெற்றி நினைவு நிகழ்வு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

உலக இலங்கைப் பேரவை தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் தேசிய படைவீரர் அமைப்பு ஆகிய அமைப்புக்கள் கூட்டாக இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளன.

"வெற்றியீட்டிய தாய் நாட்டை பாதுகாப்போம் - படைவீரர்களை தனிமைப்படுத்த மாட்டோம்" என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

பௌத்த மாநாயக்க தேரர்கள், படைவீரர் குடும்பங்கள் அவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

படைவீரர்களுக்கு மரியாதை செலுத்த இந்தச் சந்தர்ப்பத்தில் இணைந்து கொள்ளுமாறு அனைத்து தேசப்பற்றுடையவர்களுக்கும் அழைப்பு விடுப்பதாக இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (செ-11)




கண்ணீர் அஞ்சலி

வைத்தி சின்னப்பு

சகாஷ்ராபிஷேக வைத்திய சூரி

(RIMP, DAM,MIH)

எமது சங்கத்தின் உறுப்பினர் ஆகிய வைத்தியர் (திருமதி வி.ஆனந்தஜோதி அவர்களின் அன்புத் தந்தையாரும் சங்கத்தின் பொருளாளர் ஆகிய வைத்தியர் த. விஜயகுமார் அவர்களின் மாமனாருமாகிய மருத்துவர் வை.சின்னப்பு அவர்களின் இறப்பினால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தவரின் துயரில் பங்கெடுத்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காய் இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்
இலங்கை

(8675)


# பொலிஸை துரத்திய பொலிஸ்!

## பண்ணைக் கடலுள் வீழ்ந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிவில் உடையில் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை சீருடை தரித்த பொலிஸார் துரத்திய போது பாலத்தினுள் விழுந்து தப்பிக்க முயன்ற பொலிஸ் உத்தியோகத்தர் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்,

மண்டைதீவுப் பகுதியில் இருந்து யாழ்.நகர நோக்கி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சிவில் உடையில் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார். அவரை போக்குவரத்து பொலிஸார் பண்ணைப் பாலத்தில் வழி மறித்துள்ளனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நிறுத்தாமல் சென்றதனால் பொலிஸார் இவரை துரத்திச் சென்றுள்ளனர்.

அவர்களிடத்தில் இருந்து தப்பிப்பதற்கு குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வேகமாக சென்று மோதுண்டு பின் பண்ணை பாலத்துக்குள்ளாக கடலில் குதித்து தப்பிக்க முயன்ற வேளை விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளார்.

பாலத்தினுள் விழுந்தவரை உடனடியாக கைது செய்து வைத்தியசாலையில் அனுமதித்த போதே இவர் பொலிஸ் உத்தியோகத்தர் என தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4,9,30)

# சைக்கிள் திருட்டு

(கரணவாய்)

துன்னாலை கோவில் சந்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு புகுந்த திருடர்கள் துவிச்சக்கரவண்டியையும் அங்கு வைக்கப்பட்டிருந்த தேங்காயினையும் திருடிச் சென்றுள்ளனர்.

அப்பகுதியில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (செ-60)

# பாடசாலை மாணவர் பாராளுமன்ற அமர்வு

(யாழ்ப்பாணம்)

யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இரண்டாவது மாணவர் பாராளுமன்றத்தின் அமர்வு - 1 எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் காசிநாதர் குணசிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் உள்நாட்டு இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி சுகர்ஜினி சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சிதம்பரம் நாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான
தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்
யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



✌ கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).

✌ உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



✌ கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.



✌ FACIALS (முக அழகுக்கலை)
Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)

✌ BRIDAL DRESSINGS
(மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

✌ பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், மற்றும் மகளிருக்கான ஆடைகள் தைக்கும் கிழமைநாள் தையல் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-05-2017
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-05-2017
சனி காலை 10.00 மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-



(C-8620)


# சமய அறிவுப் போட்டிகள்

கலாசாலை வீதி, திருநெல்வேலி ஸ்ரீ காளிகாம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தானத்தினால் பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பரீட்சையில் பங்குபற்றும் மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களை திருநெல்வேலி பாரதி அக்கடமியிலும் திருநெல்வேலி தனலக்குமி புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும் என தேவஸ்தான செயலாளர் அறிவித்துள்ளார். (இ-3)


## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகத்தை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 31.05.2017ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| இல. | உணவகங்கள் |
|---|---|
| 01 | பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம் - திருநெல்வேலி |
| 02 | ஆனந்தகுமாரசுவாமி பெண்கள் விடுதி உணவகம் - திருநெல்வேலி |

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 2000/=உம் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 500/=உம் தனித்தனியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C-8621) 20.05.2017

# இன விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக ஓரணியில் திரண்ட முஸ்லிம் அமைச்சர்கள்

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் தலைதூக்கியுள்ள இனவாதச் செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கான முன்னெடுப்புக்களை தீவிரப்படுத்தும் நோக்கில் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று வெள்ளிக்கிழமை முஸ்லிம் சமய விவகார அமைச்சில் நடைபெற்றது.



அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சந்திப்பில், முஸ்லிம் விரோத செயற்பாடுகளால் தற்போது முஸ்லிம்கள் மத்தியில் நிலவும் அசாதாரண சூழ்நிலை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் கூறினார்.

அத்துடன் இவ்விடயங்களை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்து, அவற்றுக்கான தீர்வினைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.


இதற்காக ஜனாதிபதியுடனான சந்திப்பொன்றை மேற்கொள்ளும் நோக்கில் கூட்டத்தில் கலந்துகொண்ட முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

தற்போது மீண்டும் தலைதூக்கியுள்ள கடும்போக்குவாத கும்பல்களின் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய காட்டமான கருத்துகளை தெரிவித்தனர். அத்துடன், இதன் பின்னணியில் செயற்படும் இனவாத சக்திகள் தொடர்பாக இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் அமைச்சர்களான எம்.எச்.ஏ. ஹலீம், ரவூப் ஹக்கீம், பைசர் முஸ்தபா, இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம். மன்சூர், எஸ்.எம். மரிக்கார், முஜிபுர் ரஹ்மான், உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (இ-7)

# மகிந்த ஆட்சியைவிட நல்லாட்சியில் வன்முறைகள் அதிகரித்துள்ளன

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா அதிருப்தி



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆட்சிக்காலத்திலும் பார்க்க, முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகளை களை ஒழிப்போம் என ஆட்சிபீடம் ஏறிய நல்லாட்சியின் ஆட்சியில் முஸ்லிம் சமூகம் மிக மோசமாக பாதிக்கப்பட்டு வருவதாக மீள்குடியேற்ற புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

ஆரையம்பதி ஒல்லிக்குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், கடந்த மகிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. முஸ்லிம்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அதனாலேயே 95 சத வீத முஸ்லிம்கள் ஒன்றுபட்டு ஆட்சியையே மாற்றினார்கள். ஆனால் இன்று அதைவிட மிகமோசமாக முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

முஸ்லிம்களுக்கெதிரான அடக்கு முறைகறைகளை ஒழிப்போம் என ஆட்சிபீடம் ஏறிய இந்த அரசாங்கம் அதனை இதுவரை நிறைவேற்றவில்லை. முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

இந்த நிலைமை தொடர அனுமதிக்க முடியாது. இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து பேசவிருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அமைச்சர் றிசாத் உட்பட

# முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எதிராக ஞானசார தேரர் வழக்கு

அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார் மற்றும் அசாத் சாலி ஆகியோருக்கு எதிராக பொது பல சேனா அமைப்பு பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

பொது பல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் நேற்று இந்த முறைப்பாட்டை பதிவு செய்தார்.

பல்வேறு வழிகள் மூலம் செயற்படுத்தும் இனவாத மற்றும் அடிப்படைவாத குழுக்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஞானசார தேரர் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு நேற்று முதல் ஜிஎஸ்பி.பிளஸ் வரிச்சலுகை

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ். பிளஸ் வரிச்சலுகை, பெற்றுக்கொள்வதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று விடுக்கப்பட்டிருப்பதாக வெளிநாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இதன் மூலம் இலங்கைக்கு வருடாந்தம் 5 ஆயிரம் கோடி ரூபாவிற்கும் அதிகமான வருமானம் கிடைக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த அரசாங்க காலத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி விலக்களிப்பு நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கான கடமை அரச ஊழியர்களுக்கு உண்டு

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தை பாதுகாப்பதற்கான தலையாய கடமை அரச ஊழியர்களுக்கு காணப்படுவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து சலுகைகளையும் தற்போதைய அரசாங்கம் பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ருவான்வெல்ல பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். (இ-7)

# யாழ்ப்பாணத்தில் கால்பதிக்க ஜனாதிபதியால் இனிமுடியாது



## மகிந்த தெரிவிப்பு

இராணுவத்தினர் உயிரைப் பயணம் வைத்து நாட்டுக்கு சமாதானத்தைப் பெற்றுத்தந்ததை இன்று பலர் மறந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிரைப் பணயம் வைத்துப் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ள மகிந்த ராஜபக்ஷ, தற்போது உருவாகியுள்ள நிலை கவலைக்கிடமானது எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய ஜனாதிபதிக்கு யாழ்ப்பாணத்தில் கால்பதிக்க அனுமதியற்ற ஒரு நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ரத்மலானை விகாரை ஒன்றில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வொன்றுக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## எனது மகனும்...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சைட்டம் தனியார் கல்லூரியை மூடினால் தான் அனைத்து பிரச்சினைகளும் தீரு மெனறால் அதனை செய்ய முடியும்.

அவ்வாறு செய்யும் பட்சத்தில் ஏனைய தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளையும் மூட வேண்டிய நிலை ஏற்படக்கூடும் எனவும் அழுத்தமாக தெரிவித்தார். (செ-11)

## இந்தியாவுக்கு...

இந்தியாவுடன் செயற்படும் விதம் தொடர்பில் பிரச்சினை நிலவுவதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வடக்கின் தமிழ் மக்கள் மேற்கொள்ளும் போரின் உயிரிழப்புக்களுக்கான நினைவேந்தல்கள் தொடர்பில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு பிரச்சினை இல்லை எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (செ-11)

## 8 தமிழ் ஊழியர்களை...

நடத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் அன்றையதினம் வவுனியாவில் உள்ள தென்பகுதியைச் சேர்ந்த தனியார் மோட்டார் கம்பனி ஒன்றில் பணிபுரியும் 8 தமிழ் ஊழியர்கள் தமது பணி நேரம் முடிவடைந்த பின்னர் மாலை 5.30 மணியளவில் நினைவேந்தல் அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

குறித்த எண்மரில் ஒருவரின் தாயாரான புதுக்குடியிருப்பு விசுவமடுவைச் சேர்ந்த சிவலிங்கம் ராஜலக்ஷ்மி என்பவர் இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டிருந்தார்.

அவரது நினைவாக தாயாரின் உருவப் படத்தை வைத்து சக ஊழியர்களுமாக மேற படி 8 பேரும் நினைவேந்தலை அனுஷ்டித்திருந்தமையை அறிந்து கொண்ட தென்பகுதி தனியார் கம்பனியின் மேலிடம் குறித்த எண்மர் தொடர்பிலும் பொலிஸ் விசாரணை ஒன்று நடத்திய பின், அவர்களை உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கம் செய்துள்ளது.

இதில் முல்லைத்தீவு, தர்மபுரம், பூநகரி ஆகிய இடங்களைச் சேர்ந்த எண்மரே பணி நீக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளவர்களாவர். (செ)

## பயங்கரவாதத்துக்கு...

கையின் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. எனினும் நாடாளுமன்ற வாக்கெடுப்பு திகதி இன்னும் குறிக்கப்படவில்லை.

எனினும் இந்த வரைபு, தற்போதைய சட்டத்துக்கு அமைவாகவே உள்ளது. அத்துடன் புதிய பிரச்சினைகளையும் ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில் இது சர்வதேச நடைமுறைகளுடன் ஒப்பிடும்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை வழங்கிய உறுதி மொழிக்கு அமைவாக தயாரிக்கப்படவில்லை என்று மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆசியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

எனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகள், இலங்கைக்கு இந்த விடயத்தில் அழுத்தம் கொடுத்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு மதிப்பளிக்க வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (செ-11)

## பொலிஸார் மீது...

நேற்று அதிகாலை 12.15 மணியளவில் ஏ9 வீதியில் உள்ள கச்சார் வெளிப்பகுதியில் விசேட போக்குவரத்து பொலிஸார் சோதனை நடவடிக்கைக்காக நின்ற போது அருகில் இருந்த பற்றைக்குள் இருந்து மூன்று துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாகவும் இது ரி-56 ரக துப்பாக்கியினால் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்துப்பாக்கி சூட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

இதனையடுத்து அப் பகுதிக்கு ஆயுதம் தாங்கிய பெருமளவு இராணுவம், பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பெரும் எடுப்பில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. வீதிகளால் சென்ற வாகனங்கள், மோட்டார் சைக்கிள் என்பன மறிக்கப்பட்டு துருவித் துருவி சோதனையிடப்பட்டது.

மோப்ப நாய்களும் தடயவியல் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு கச்சார் வெளி பகுதி முழுவதும் சல்லடை போட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலையிலேயே, வீடுகளுக்குள்ளேயே தங்கியிருக்குமாறும் வெளியில் வரவேண்டாம் என குடிமனைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஒலிபெருக்கி மூலமாக இராணுவத்தினர் அறிவித்தனர்.

வெளியில் வந்து பார்த்தபோது, இராணுவத்தினர் வீதிகளில் காணப்பட்டனர்.

பொலிஸ் மீது யாரோ துப்பாக்கிப்பிரயோகம் செய்ததனால்தான் இராணுவத்தினர் சுற்றி வளைத்திருக்கின்றனர் என தெரிந்து கொண்டோம் என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

காலை எட்டு மணிவரையில் நீடித்த இந்த இராணுவ சுற்றிவளைப்பின்போது அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இராணுவத்தினரின் தேடுதலின்போது, எவரும் கைது செய்யப்படவில்லை. ஆயினும் காட்டுப் பிரதேசங்களில் தொடர்ந்து தேடுதல் நடத்தப்படுகின்றது என பொலிஸார் தெரிவித்தனர்.

யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் கழிந்த நிலையில் இராணுவத்தினர் இந்தப் பகுதியில் முதன் முறையாக யுத்த காலத்தைப் போன்று சுற்றி வளைப்பு தேடுதலில் ஈடுபட்டிருந்தது எங்களுக்கு அச்சமாக இருந்தது என அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்திருந்தனர். (செ-60,312,9,15)

(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே...)

# பாரிய அபிவிருத்தி திட்டங்களை வடக்கில் முன்னெடுக்க வேண்டும்

## பிரதமர் ரணில் கருத்து

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதிலும் உள்ள பொருளாதார நெருக்கடியை விட வடக்கில் மிகவும் மோசமான நெருக்கடி நிலைமை உள்ளது என தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாரிய அபிவிருத்தி திட்டங்களை வடக்கில் முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அரச பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

குறுகிய கால அவகாசத்தில் வடக்கின் பொருளாதார அபிவிருத்தி பற்றி கலந்துரையாடுவதற்கு கூடியுள்ளோம். இலங்கை முழுவதும் வருமானத்தை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி நிலை மோசமாக அதிகரித்துள்ளது.

கடந்த ஆட்சியாளர்கள் போர் நடந்த போது கடன் எடுத்து அரசை நடத்தி வந்தார்கள். நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது கடனை அடைப்பது எமது பொறுப்பாக உள்ளது. அதற்கான வழிவகைகள் மேற்கொள்வது அத்தியாவசியமாகவுள்ளது.

வருமானத்தை அதிகரிப்பதற்கு நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். அபிவிருத்தி பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தினால்தான் வருமானம் அதிகரிக்கும். ஆனால நாடு முழுவதிலும் உள்ள பிரச்சினையை விட வடக்கில் பிரச்சினைகள் அதிகமாகவுள்ளது. போரின் விளைவுகளால் ஏற்பட்ட பாதிப்பின் ஒருபகுதி இன்றும் நிவர்த்தி செய்யப்படாமல் உள்ளது. காணிவிடுவிப்பு, காணாமல்போனோர், வேலைவாய்ப்பின்மை, போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியுள்ளது.

நாடு முழுவதும் வேலைவாய்ப்பு பிரச்சினை மிக மோசமாகவுள்ளது. உடனடி தீர்வு காண முற்படுகிறோம். அதிலும் வடக்கில் மாகாண சபை மற்றும் அதற்கு பொருத்தமான கட்டமைப்புக்களுடன் கலந்துரையாடி, ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் சந்தர்ப்பத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

அபிவிருத்தி சேவை, ஆசிரியர் சேவை ஆகிய துறைகளில் வேலைவாய்ப்புக்களை வழங்கலாம் என ஆலோசித்து வருகிறோம். பயிற்சி பெற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை முதலில் உருவாக்க நினைப்பதுடன், பாடசாலைகளில் இருந்து இடைவிலகியவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டிய தேவை உள்ளது. எமது அபிவிருத்தி தொடர்பில் வடக்கில் உள்ள அதிகாரிகளிடத்தில் மட்டுமல்ல ஏனைய அதிகாரிகளிடத்திலும் இது தொடர்பில் பேசி வருகிறோம்.

வருமானத்தை அதிகரிப்பதற்கு மக்கள் மத்தியில் கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளோம். ஆனால் அவை போதுமானதாக இருக்காது. அத்துடன் பயிற்சியும் வேலைவாய்ப்பும் வழங்க வேண்டும். இந்த வருடம் கடன் உதவியை வழங்குவதற்கு இருந்தோம ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாட்டில் வரட்சி ஏற்பட்ட காரணத்தால் அந்த நிதி வரட்சி நிவாரணத்துக்கு செலவாகியுள்ளது.

இந்து சமுத்திரத்தில் செல்வம் கொழிக்கும் நாடாக இலங்கையை மாற்றுவதே எமது திட்டம். அரசியல் பிரச்சினையை தீர்ப்பது எமது கையில தான் உள்ளது என மோடி தெரிவித்தார். ஆனால் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் கடமை அனைவரிடமும் உள்ளது. எந்தவொரு நாட்டிலும் அரச தனியார் துறைகள் இணைந்துதான் அபிவிருத்தியை ஏற்படுத்துவது வழமையாகவுள்ளது. அதேபோல் குறுங்கால, இடைக்கால திட்டம் வகித்து பொருளாதார அபிவிருத்திகளை செய்து வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவுள்ளோம்.

மேலதிக வீட்டுத்திட்டம் தேவையாகவுள்ளது அதற்கு இந்தியா வாக்குறுதி அளித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடன் முதலீட்டு திட்டம் ஒன்றை நாடு முழுவதும் ஆரம்பித்துள்ளோம். அதை விசேட விதமாக வடக்கிலும் ஆரம்பித்துள்ளோம். அத்திட்டத்தை பொறுத்தவரையில் பாரிய முதலீட்டை செய்ய விரும்பும் சர்வதேச முதலீட்டாளர்கள் இங்கு முதலிட முடியும் அவர்கள் லாபம் ஈட்டும் வரை 100 வீத வரிச் சலுகை வழங்கவுள்ளோம். அதிலும் விசேட விதமாக 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிகு முன்னர் வடக்கில் முதலீடு செய்பவர்களுக்கு 2 மடங்கு வரிச்சலுகை அவர்கள் லாபம் ஈட்டும் வரை வழங்கப்படவுள்ளது. அவ்வாறு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவுள்ளோம்.

வடக்கில் எந்தெந்த துறைகளை அபிவிருத்தி செய்ய முடியும் என முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுடன் பேசி வருகிறோம். பாரிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

அந்த வகையில் யாழ்ப்பாணம்-மன்னார், மன்னார்-வவுனியா, வவுனியா- திருகோணமலை ஊடாக கடுகதி வீதி அமைக்கவுள்ளோம். அதை மேலும் நாடு முழுவதும் விஸ்தரிக்கவுள்ளோம். யாழ்.மாவட்டத்தில் அதிக சனத்தொகை உள்ள காரணத்தால் யாழ்.மாவட்டத்தை விட்டு வெளியே பாரிய தொழிற்சாலைகளை அமைக்க திட்டமிட்டுள்ளோம். வேலைவாய்ப்பை அதனூடாக வழங்கவுள்ளோம். நாடு முழுவதும் 30 ஆயிரம் ஏக்கர் காணியில் பயிர் செய்வதற்கான திட்டமும் எம்மிடம் உள்ளது.


நேரடியாக வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கு செயலணி உருவாக்கப்பட்டு அது செயற்பட்டு வருகிறது. அதன் மூலம் நாடு முழுவதும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய திடட்மிட்டுள்ளோம். தொழில்த் துறையை ஊக்குவிப்பதற்கு கல்வி, பயிற்சிகளை தான் முதலில் ஆரம்பிக்கவுள்ளோம. பொருளாதார பிரச்சினை நாடு முழுவதனையும் விட வடக்கில் அதி மோசமாகவுள்ளது. விஞ்ஞானத்துறைக்கு திறமையான பட்டதாரிகள் தேவையாகவுள்ளது அது நாடு முழுவதும் பிரச்சினையாகவுள்ளது.

வடக்கில் முக்கிய துறையான விவசாயம், மீன்பிடி அதை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை ஊடாக வடக்கில் விவசாயம் மீன்பிடி போன்ற துறைகளை அபிவிருத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்ப கூடிய வாய்ப்புள்ளது.

வடக்கில் உல்லாச துறையை அதிகரிக்கலாம். அது எங்கெங்கு மேற்கொள்ள வேண்டும் என ஆராய வேண்டும். அதற்கான சூழல் யாழ் மாவட்டத்தில் பெரிதாக இல்லை என கருத்து உள்ளது. கடுகதி வீதி அமைக்கவுள்ள பாதைகளில் அந்த உல்லாசத்துறைகளை அபிவிருத்தி செய்யலாம். அத்துடன் பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்கு சலுகை அடிப்படையில் கடன் தரக்கூடிய நாடுகளை கண்டறிய வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்று கூடி எமது அபிவிருத்திக்கு உழைக்க வேண்டும். நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்க்க நினைத்து செயற்பட்டால் வடக்கில் உள்ள பிரச்சினையை தீர்க்க முடியாது. எனவே வடக்கில் பாரிய திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என பிரதமர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## கனரக வாகனத்துடன்...



வினருடைய பிறந்த நாள் ஒன்றுக்காக கைதடி-கோப்பாய் வீதியூடாக குறித்த குடும்பஸ்தர் பயணம் செய்துகொண்டிருந்த போது எதிரே கனரக வாகனம் ஒன்று வந்துள்ளது.

இதன்போது கனரக வாகனத்தோடு குடும்பஸ்தர் பயணித்த மோட்டார் சைக்கிளின் பக்க கண்ணாடி முட்டியுள்ளது. இதனால் நிலை தடுமாறி கீழே வீழ்ந்த குடும்பஸ்தரின் தலைக்கு மேல் கனரக வாகனத்தின் சில்லுகள் ஏறியுள்ளன.

இதில் குடும்பஸ்தர் தலை நசிந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை கனரக வாகனங்கள் 40 அடி வீதிகளிலேயே பயணிக்க முடியும் என்ற வீதி ஒழுங்கு முறை இருக்கும் போது எவ்வாறு குறித்த வாகனம் கைதடி-கோப்பாய் வீதியில் பயணித்தது என கேள்வியெழுப்பட்டுள்ளது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்றைய தினம் குறித்த விபத்து தொடர்பான விசாரணைகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4,9,60,87,30,78)

# ஐரோப்பிய நாடுகளின் உதவியே வேண்டாம்

## உதறித் தள்ளிய பிலிப்பைன்ஸ்



ஐரோப்பிய நாடுகள் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட வாய்ப்புள்ளதால் அவர்களின் உதவியே வேண்டாம் என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டுடேர்டெ தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டுடேர்டெவின் போதைப்பொருளுக்கு எதிராக பல்வேறு அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். ரொட்ரிகோவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல் வேறு நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

குறிப்பாக ஐரோப்பிய யூனியன் பிலிப்பைன்ஸ் நாட்டின் நடவடிக்கைகளை கடுமையாக எதிர்த்து வருகிறது. ரொட்ரிகோவின் நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டிவருகி றது.


இந்நிலையில், ஐரோப்பிய நாடுகள் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட வாய்ப்புள்ளதால் அவர்களின் உதவியே வேண்டும் என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டுடேர்டெ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரொட்ரிகோவின் செய்தி தொடர்பாளர் எர்னெஸ்டோ கூறுகையில், ஐரோப்பிய யூனியனில் இருந்து பெறப்படும் நிதியை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்ற பரிந்துரைக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியன் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு நிதி அளித்து வரும் 8ஆவது பெரிய நாடாகும். இதனால் அதிகளவில் பாதிப்பு ஏற்படக் கூடும் என்று தெரிந்தும் பிலிப்பைன்ஸ் இந்த நடவ டிக்கையை மேற்கொண்டுள்ளது. (இ-7)

# மரண அறிவித்தல்

## சின்னையா சோமசுந்தரம்



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சோமசுந்தரம் 17.05.2017 புதன்கிழமையன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னையா சிதம்பரத்தின் அன்பு மகனும் தணிகாசலம் மனோன்மணியின் அன்பு மருமகனும் குணவதியின் அன்புக் கணவரும் கிரிதாஸ் (டோகா), கிருசாணி (சுவிஸ்), நதீஸ் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்வராணி, சின்னராசா மற்றும் ஆனந்தராசா, நிர்மலா, மாலா ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் ராசாம்பாள், சுசிலா, லோகநாதன் காலஞ்சென்ற அமுதலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அமீரா, சுகிர்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கஸ்மியா, சுஜீன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.05.2017 நாளை ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.

(8671)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஜேர்மனுக்கான இலங்கைத் தூதுவராக கருணாசேன ஹெட்டியாராச்சி நியமனம்



(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி ஜேர்மனுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட உள்ளதாக தெரியவந்துள்ளது.

கருணாசேன ஹெட்டியாராச்சியை குறித்த பதவிக்கு நியமிப்பதற்காக ஜேர்மனிய செய்யப்பட்டுள்ள்தாக அரச வட்டார தகவல்கள் தெரிவிக்கி ன்றன.

ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவராக கடமையாற்றும் கருணாதிலக அமுனுகம தனது பதவியிலிருந்து ஓய்வு பெற உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கருணாசேன ஹெட்டியாராச்சி கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் பாதுகாப்புச் செயலாளர் பதவி வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரச இணையத்தளங்கள் விரைவில் ஆராயப்படும்

இலங்கை அரசாங்கத்தின் அனைத்து இணையத்தளங்களும் பாதுகாப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக, தகவல் தொடர்பாடல் நிலையம் தெரிவித்துள்ளது. உலகளாவிய ரீதியிலுள்ள அரசாங்க இணையத்தளங்கள் அனைத்தும், சைபர் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றமையை யடுத்தே, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நடவடிக்கை, இலங்கை கணனி அவசர தயார்நிலை பிரிவு மற்றும் ஒருங் கிணைப்பு மையத்துடனும் தொலைத்தொடர்பு மற்றும் டிஜிற்றல் உள்கட்டமைப்பு அமைச்சுடனும் இணைந்து முன்னெடுக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்க இணையத்தளங்களின் பாதிப்பு மதிப்பீடுகள் மற்றும் அணுகுமுறைகள் போன் றவை குறித்து இதன்போது ஆரர்யப்படவுள்ளது. (இ-7)

# வெளிநாடு செல்ல அனுமதி கோருகிறார் யோஷித ராஜபக்ஷ



வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரி யோஷித ராஜபக்ஷ தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நிதி மோசடி குற்றச்சாட்டில் பிணை வழங்கப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷ வெளிநாடு செல்வதற்கு தடை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எவ்வாறாயினும் சிகிச்சை பெறுவதற்காக இரண்டு மாத காலத்திற்கு அவுஸ்திரேலியா செல்ல வேண்டி இருப்பதால் வெளிநாடு செல்வதற்கான தடையை நீக்குமாறு யோஷித ராஜபக்ஷவின் சட்டத்தரணி நீதிமன்றத்தை கேட்டிருந்ததாகவும் குறித்த கோரிக்கை தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று விளக்கமளிப்பதற்கு காலம் வழங்குமாறு அரச தரப்பு சட்டத்தரணி கேட்டுக் கொண்டதற்கிணங்க, எதிர்வரும் 23 ஆம் திகதி வழக்கை மீண்டும் விசாரிக்க நீதிபதி ஏ.ஆர். ஹெய்யன்துடுவ தீர்மானித்ததாகவும் தெரிய வருகிறது. (இ-7)

# இராசி பலன்

20.05.2017
(வைகாசி 06, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
நவமி பிற்பகல் 1.04 மணிவரை
சதயம் காலை 7.01 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
கல்கி பகவான் ஏகத்துவதினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | புத | சூரி செவ் | |
| சந் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம் இரவு 1.00மணிக்கு மீன-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது. கோரிக்கைகள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், பகையொன்று நட்பாகலாம்.

**கடகம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்திடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு விலகும், விரயங்கள் கூடும்.

**சிம்மம்:** கனவு பலிதமுண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சாமர்த்தியமாகப் பேசி சமளிப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், உடல்நலன் சீராகி உற்சா கப்படுத்தும், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவார்.

**துலாம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள் புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவார்கள்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வளர்ச்சிப் பாதைக்கு வித்திடுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**தனுசு:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பொருளாதார நிலை உயர்வடையும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மகரம்:** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** உறவினர்கள் நலன்கருதிய சுப செலவுகள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை அதிகரிக்கலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**மீனம்:** ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம்.

# உரிமை கோரப்படாத வாகனங்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப் படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகிறது. எனவே குறித்த சான்றுப் பொருட் களை உரிமை கோருபவர்கள் எவரேனும் இருப்பின் 2 மாத காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலை நாட்டும்படி குற்றவியல் நடவடி முறைச் சட்டக் கோவையின் 431 (2) ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

வழ. இலக்கம் AR/458/17 சான்றுப் பொ.இல- PR /222/17 –சான்றுப் பொருள் விபரம் - 40"வட்ட அடியுடைய வெப்பத்தை தாங்கும் சீற்றோல் –01,வழ. இலக்கம் AR/ 457 /17 சான்றுப் பொ.இல- PR /168/17 –சான்றுப் பொருள் விபரம் இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC /602/PC /17சான்றுப் பொ.இல PR /85/17 P1 சான்றுப் பொருள் விபரம் 56687390 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/85/17 P2 சான்றுப் பொருள் விபரம் 69846137 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/85/17 P3 சான்றுப் பொருள் விபரம்69631650 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி –01,வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/85/17 P4 சான்றுப் பொருள் விபரம் 55603289 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/86/17 P1 சான்றுப் பொருள் விபரம் 69591733 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC/602/PC/17 சான்றுப் பொ.இல PR/86/17 P2 இலக்கம் தெளிவற்ற பெண்கள் துவிச்சக்கரவண்டி –01,வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/86/17 P3 சான்றுப் பொருள் விப ரம் 69887918 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச் சக்கரவண்டி–01, வழ. இலக்கம் MC/602/PC/17 சான்றுப் பொ.இல PR/ 86/17 P1 சான்றுப் பொருள் விபரம் 69632242 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி–01,வழ. இலக்கம் MC/602/PC /17 சான்றுப் பொ.இல PR/86/17 P2 சான்றுப் பொருள் விபரம் 5713629 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC / 602/PC/17 சான்றுப் பொ.இல PR/86/17 P3 சான்றுப் பொருள் விபரம் 188785 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC/602 /PC/17 சான்றுப் பொ.இல PR/88/17 P1 சான்றுப் பொருள் விபரம் 69869896 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/88/17 P2 சான்றுப் பொருள் விபரம் 0702113 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி –01,வழ. இலக்கம் MC/602/PC/17 சான்றுப் பொ.இல PR/88/17 P3சான்றுப் பொருள் விபரம் 69778088 இலக்க லுமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC /602 / PC /17 சான்றுப் பொ.இல PR/88/17 P4 சான்றுப் பொருள் விபரம் 57149705 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/89/17 P1 சான்றுப் பொருள் விபரம் 69902889 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச் சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/ 89/17 P2 சான்றுப் பொருள் விபரம்57152842 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/89/17 P3 சான்றுப் பொருள் விபரம் 69575843 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக் கரவண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC/17 சான்றுப் பொ.இல PR/89/17 P4சான்றுப் பொருள் விபரம் 57206693 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி –01, வழ. இலக்கம் MC/602/PC /17 சான்றுப் பொ.இல PR/89/17 P4 சான்றுப் பொருள் விபரம் 57206693 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/90/17 P1சான்றுப் பொருள் விபரம் 69816980 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி–01,வழ. இலக்கம் MC/602/PC/17 சான்றுப் பொ.இல PR/90/17 P2 சான்றுப் பொருள் விபரம் 6991192 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/90/17 P3சான்றுப் பொருள் விபரம்69596494இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/91/17 P1சான்றுப் பொருள்விபரம் L1109073 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/91/ 17 P2 சான்றுப் பொருள் விபரம் BL 756014 இலக்க லுமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/91/17 P3 சான்றுப் பொருள் விபரம் இலக்கம் தெளிவற்ற வர்க்கம் இல்லாத பெண்கள் துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC/602 /PC /17 சான்றுப் பொ.இல PR/91/17 P4 சான்றுப்பொருள்விபரம் 69886761 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/91/17 P1 சான்றுப் பொருள் விபரம் 571509778 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/92/17 P2 சான்றுப் பொருள் விபரம் இலக்கம் தெளிவற்ற வர்க்கம் இல்லாத பெண்கள் துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/91/17 P3 சான்றுப் பொருள் விபரம் 69794882 இலக்க லுமரலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01,வழ. இலக்கம் MC / 602 /PC /17 சான்றுப் பொ.இல PR/92/17 P4 சான்றுப் பொருள் விபரம் 69309062 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/93/17 P1 சான்றுப் பொருள் விபரம் 69265729 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/93/17 P2 சான்றுப் பொருள் விபரம் SL 643237 இலக்க சிங்கர் வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி–01 , வழ. இலக்கம் MC/602 /PC /17 சான்றுப் பொ.இல PR/93/17 P3 சான்றுப் பொருள் விபரம் 69817125 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, வழ. இலக்கம் MC /602 /PC /17 சான்றுப் பொ.இல PR/93/17 P4 சான்றுப் பொருள் விபரம் இலக்க வர்க்கம் தெளிவற்ற பெண்கள் துவிச்சக்கர வண்டி –01, MC/118/S/17 PR /182 /16 இலக்கம் இல்லாத உழவு இயந்திரப் பெட்டி –01AR / 508 /17 PR /181/16 NPWS –5734 இலக்க எரிந்த நிலையிலுள்ள மோ. சைக்கிள் AR/509/17 PR /599 / 17 இலக்கம் தெளிவற்ற லுமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி –01AR/510/17 PR /542/ 17 En 2475 இலக்க துவிச்சக்கர வண்டி –01 மறுதவணை 24.07.2017 . 27.07.2017 என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

# எம்மை நாமே ஆளும் உரிமைக்காகவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

## மாவை எம்.பி. சுட்டிக்காட்டு



முள்ளிவாய்க்கால் நினை வேந் தல் நிகழ்வு உயிர் நீத்தவர்களின் ஆத்ம சாந்திக் காக மட்டுமல்ல என தெரி வித்த, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, எமது பிரதேசத்தில் எம்மை நாமே ஆளும் அரசியல் உரிமையை வென் றெடுப்பதற் காகவும் இந்த பிரார்த்தனை நிக ழ்வை மேற்கொள்கின்றோம் என் பதை ஒவ்வொருவரும் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும் என வும் தெரி வித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் மனித படு கொலையின் 8 ஆவது ஆண்டு நினைவு தினம் தமிழரசுக் கட்சி யின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்க ப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக் கையில்,

எமது தேசிய இனத்தில் பல இலட்சம் மக்கள் போர் எனும் பெயரில் கொல்லப்பட்டார்கள். உயிரிழந்தவர் களுக்காக அந்த நாளை, இலட்சிய துடிப்புள்ள நன்றி யுள்ள மக்கள் தற்போது தமது கண்ணீர் அஞ்சலியை செலுத் துவ துடன், தமது இலக்கை அடையும் சத்தியத்தையும்இந்த நினைவு நாளில் எடுக் கிறார்கள்.

முன்னைய காலத்தில் நாம் எமது மக்களை நினைவு கூருவதற் குக்கூட இராணு வத்தரப்பினர் தடைபோட்டு அச்சுறுத்தல் விடுத் தார்கள், அதையும் மீறி நாம் அஞ்சலி செலுத்தினோம். போர் இடம் பெற்ற காலத்தில் பாராளு மன்றத்தில் உண்ணாவிர தம் செய்தோம். போராட்டம் செய்தோம். அஞ்சலியையும் நிகழ்த்தியுள் ளோம்.

அஞ்சலி செலுத்துவது உயிரி ழந்தவர்களின் ஆத்மா சாந்தி அடையும் என்ற நம்பிக்கை உள்ள காரணத் தினால் தான் ஆண்டு தோறும் உறவுகள் அதை மேற் கொண்டு வருகிறார்கள்.

தமிழத் தேசிய இனம் இரா ணுவ ஆக்கிரமிப்புக் களின் மூலம் நிலம் இழந்து, அரசியல் உரி மைக்காக தமது உயிர்களை இழந் தார்கள். உரிமையை வெல்ல எமது இளைஞர் சமுதாயம் பிர பாகரன் தலைமையில் போராட் டத்தினை மேற் கொண்டார்கள். ஆயுத போராட்டமும் மக்களின் அஹிம்சை போராட்டமும் மாபெரும் ஜனநாயக சக்தி யாக எமக்கு இருந்தது. தற் போது நாம் ஜனநாயக பலத்தின் ஒரு பகுதியை இழந் துள்ளோம்.

இருப்பினும் நாம் எல் லோரும் ஒன்றாக இருக்கும் சூழல் பலமாக உள்ளது. அத்துடன் ஜனநாயக ரீதியில் எமக்கு வாக்கு பலம் உள் ளது. அத்துடன் சர்வதேசத் திடம் இருந்து அதாவது ஜெனிவா தீர்மானம் எமது எதிர்காலத்தை தீர்மானிப் பதில் பக்கபலமாக உள்ளது. எனவே நாம் தனிமைப்படுத் தப்பட்டவர்கள் அல்ல என் பதை மறந்துவிடக் கூடாது.

ஏன் இந்தப் போராட்டம்? எதற்காக் இந்த அழிவு? ஏன் இதை மேற்கொண்டார்கள் என்ப தற்கான மூல கார ணத்தை நாம் மறக்கக் கூடாது. ஆத்ம சாந்திக்காக மட்டு மல்லாமல், சுதந்திரமாக எமது மண்ணில் எம்மை நாமே ஆட்சி செய்ய வேண்டும்.

எமக்கான இறைமை, சுய நிர்ணய உரிமை என் பவற்றை பெற்று நாம் இழந்த சுதந் திரத்தை பெற்று அந்த அரசியல் உரி மையை நிலைநாட்ட வேண்டும் என் பதற்காகவும் தான் இந்த பிரார்த் தனைகள் இடம்பெறு கின்றன என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண் டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)




# தொடர் திருட்டில் ஈடுபட்டவரே கைக்குண்டுடன் கைதானார் பரு.பொலிஸார் தகவல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் , சுன்னாகம், காங்கேசன்துறை, சாவகச் சேரி, பளை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை போன்ற பொலிஸ் பிரிவுகளில் சங்கிலி, தாலிக்கொடி போன்ற நகைத் திருட்டில் தொடர்ந்து ஈடுபட்ட நபரைத் தாம் கைது செய்த தோடு அவரிடமிருந்து கைக் குண்டையும் கைப்பற்றிய தாக பருத்தித்துறைப் பொலி ஸார் தெரிவித்தனர். கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அல்வாய் வடக்கைச் சேர்ந்த 33 வயதுடைய சந் தேக நபரைக் கைது செய்து சோதனையில் ஈடுபட்ட போது அவரது ஆடையில் மறைத்து வைத்திருந்த கைக் குண்டு ஒன்றை அவரிடமிருந்து மீட்ட தாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். இச் சோதனை நடவடிக்கையினை பருத்தித் துறை பொலிஸ் நிலைய தலைமைத்துவ பொறுப்பதி காரி பிரிவிற்குட்பட்ட பத்துப் பேர் கொண்ட குழுவினர் மேற்கொண்டதாக பொலி ஸார் தெரிவித்தனர். (இ-3)

# மகிழ்விழா இன்று

இலங்கை திறந்த பல் கலைக் கழக கல்விப் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் . சுலை மான் செய்யயது சரூக்டீன் அவர் களின் இடர் நிறை காலத்து உட னுறை உதவி உணர்- மகிழ்விழா இன்று இடம்பெறும்.

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகக் கல்விப் பீடத்தின் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கல்வித் துறையின் சிரேஷ்ட விரி வுரையாள ராகவும் பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தின் தமிழ் மொழி மூல இணைப்பாளராகவும் நீண்ட காலம் கடமையாற்றிய ஜனாப் சு.செ.சரூக்டீன் சேவையி னைப் பாராட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் இவ் மகிழ்விழா நடைபெறும். (இ-3)



வடமாகாண சபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டமையை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் சிகை ஒப்பனை நிலையத்தில் பணிபுரியும் வறிய குடும்பம் ஒன்றின் வாழ்வாதார நடவடிக்கைக்காக தையல் இயந்திரம் ஒன்றினை அன்பளிப்புச் செய்தார்.

# மாகாண அதிகாரங்களை மத்தி தன்வசப்படுத்தாது

## பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

கல்வி மேம்பாட்டுக்காக தேசிய கொள்கை ஒன்றை வகுக்கும் பொழுது மாகாணசபை கொண்டுள்ள அதிகாரங்களை மத்திய அர சாங்கம் தன்வசப்படுத்திக் கொள்ளாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பண்டாரவளை சென். தோமஸ் கல்லூரியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியினை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

புதிதாக ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்காக பெருந்தொகை நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்வதாகவும் ஆசிரியர்களை இணைத்துக்கொண்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கும் நடைமுறைக்கு முற்றுப் புள்ளிவைக்கப்படும். ஆசிரியர்களை பயிற்றுவித்து பாடசாலைகளில் ஈடுபடுத்தும் நடைமுறை முன்னெடுக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அரசாங்கம் ஆசிரியர்களை சேவையில் இணைத்துக்கொள்வது சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கே ஆகும். மாகாண சேவைக்கு அல்லது மத்திய அரசாங்கத்தின் சேவைக்கு இல்லை என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார். இது பாடசாலையின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கு பின்புலமாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் முன்னேற்றங்கள் தொடர்பான மதிப்பீட்டு முறையொன்றும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதற்கும் மேலதிகமாக முன்னர் நடைமுறையிலிருந்த பாடசாலை பரிசோதனை சேவையை ஆரம்பித்து இதில் ஈடுபட்டுள்ளோர் பாடசாலைகளுக்கு சென்று வழங்கப்படும் அறிக்கை பாடசாலை அபிவிருத்தி சபைக்கும் கல்வி அதிகாரி களிடமும் சமர்ப்பித்து முன் னேற்ற மதிப்பீடு தொடர்பிலும் கவனம் செலுத்தப் படும் என்றும் பிரதமர் தெரி வித்தார்.

இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒரு முறை, ஆசிரியர்களை தெளிவுபடுத்துவதற்கான நடைமுறையொன்று ஏற்பாடு செய்யப்படும். சிறந்த ஆசிரியர்கள் சேவையில் இருந்தால் மாத்திரமே கல்வியின் மூலமான இலக்கை வெற்றிகொள்ள முடியும் என்றும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

எதிர்வரும் 5 வருடங்களில் இந்த கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என்றும் இதன்போது பிரதமர் தெரிவித்தார். (இ-7)


**மனதில் சுமையா?**

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துய்ரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?
*உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.*

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
"மதசார்பற்றது "ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 877
(தினமும் காலை 9.00 - 1.00)
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



**டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி**

பைவர் கிளாஸ் மோல்ட், பைவர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும். (சி.8589)

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021 222 8680, 077 592 5088


## இசைவிழாவின் இரண்டாம் நாள்

இலங்கை இளங்கலை ஞர் மன்றம் வழங்கும் 38 ஆவது இசை விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சட்டநாதர் வீதி யிலுள்ள இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் மங்கல இசையுடன் ஆரம்ப மாகும். இளங்கலைஞர் மன்ற ஆட்சிக் குழு பொருளாளர் இ. குகதாசன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்து கொள்வார். குழுப்பாடல், வீணை இசை, இசையரங்கம், பாட்டு, வள்ளிதிருமணம், இசைநாடகம்என்பன இடம் பெறவுள்ளன. (இ-3)


**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/கடை<br>தொ.இ: B/7359 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'1"<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/7398 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:A/L/ கணக்காளர்<br>தொ.இ: B/7360 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HND, BA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/5867 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BCS/ தனியார் தொழில்<br>தொ.இ: B/7361 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 32 செவ் 4 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்<br>தொ.இ: G/5870 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/கடை<br>தொ.இ: B/7362 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 37 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HND, BMS<br>தொ.இ: G/5871 |

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



**இலங்கை**
**இளங்கலைஞர் மன்றம்**
வழங்கும்

38வது

**இசை விழா**

இடம் : இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
காலம் : 19,20,21.05.2017 (வெள்ளி, சனி, ஞாயிறு)

**இன்று 20.05.2017 - சனிக்கிழமை**
**இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்**

தலைவர் : திரு. இ. குகதாசன் (பொருளாளர், ஆட்சிக்குழு இளங்கலைஞர் மன்றம்)
முதன்மை விருந்தினர் : பேராசிரியர் என்.சண்முகலிங்கன் (முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**மாலை 4.00 மணி - மங்கல இசை**
தவில், நாதஸ்வர இளங்கலைஞர்கள்
நாதஸ்வரம் : கி.ஆரூரன், : யோ.கஜானன் — தவில் : க.வத்சலன், : அ.சிவகரன்

**மாலை 4.30 மணி - மங்கல விளக்கேற்றல்**
இறை வணக்கம் : செல்வி. க.மயூரதி — மன்றக் கீதம் : இளங்கலைஞர் மன்ற மாணவர்கள்

**மாலை 4.45 மணி - குழுப் பாடல்**
வழங்குவோர் நல்லூர் சாரங்கம் இசைக்கல்லூரி மாணவர்கள்
வயலின் : செல்வி பிரிசில்லா ஜோர்ச் — மிருதங்கம் : செல்வன் ஞா.வசந்

**மாலை 5.05 மணி - வீணையிசை**
வீணை : திருமதி.மஞ்சுசீதா ஜெயதீசன் — மிருதங்கம் : திரு. ந.சதீஷ்குமார்

**மாலை 5.35 - பாட்டு**
பாட்டு : செல்வி. எஸ்.மதுராங்கி — மிருதங்கம் : செல்வன். ஞா.வசந்
வயலின் : திரு. கா.குகபரன்

**மாலை 6.05 மணி - இசையரங்கம்**
பாட்டு : திரு. அருணந்தி ஆரூரன் — வயலின் : திரு. எஸ்.திபாகரன்
மிருதங்கம் : திரு. என்.மாதவன் — கெஞ்சிரா : பிரம்மஸ்ரீ. என்.சிவ சுந்தரசர்மா
முகர்சிங் : திரு. சி.செந்தூரன்

**7.05 மணி - முதன்மை விருந்தினர் உரை**

**7.15 மணி - "வள்ளி திருமணம்"**
இசை நாடகம் — வழங்குவோர் : நாட்டார் வழக்கியற் கழகத்தினர்

**8.30மணி - இரண்டாம் நாள் இசை விழா நிறைவு**

(C-8614) அனைவரையும் அன்புடன் அழைக்கும் இளங்கலைஞர் மன்றத்தினர்

# 65 இலட்சம் ரூபா நிதியில்

# நெற்களஞ்சியசாலை; நெல் உலரவிடும்தளம் இரு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி )

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் நடப்பாண்டுக்குரிய நிதி ஒதுக்கீட்டின் 65, இலட்சம் ரூபா நிதி உதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள விவசாயிகளின் நலன் கருதி இரு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் செ. புனிதகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கிலும், போரினால் அழிவடைந்துள்ள பொது வளங்களை மீளவும் கட்டியெழுப்பும் நோக்குடனும் அரசாங்கம் பல்வேறு விவசாய வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய முன்னாள் ஜனாதிபதி திருமதி, சந்திரிகா குமாரதுங்காவின் கீழ் உள்ள தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சினது நடப்பாண்டுக்குரிய நிதி ஒதுக்கீட்டின் மூலம் 65 இலட்சம் ரூபா எமக்கு கிடைத்துள்ளது.

இதனைக் கொண்டு, புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்தின் கீழ் 55, இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் கூடிய நெல் களஞ்சியசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அத்துடன், புதுக்குடியிருப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளின் நலன் கருதி. அறுவடையாகும் நெல்லை காயவைத்து பராமரிப்பு செய்வதற்கு 10 இலட்சம் ரூபா செலவில் நெல் உலரவிடும் தளம் அமைக்கப்படவுள்ளது.

இந்த இரு வேலைத் திட்டங்களுக்கும் கேள்வி கோரல்கள் மூலமாக ஒபந்தகாரர்கள் தெரிவு செய்யப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்படவுள்ளன.

எனவே விவசாயிகளின் நலன் கருதி முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டங்களை கண்காணிப்பு செய்வதுடன், வேலைகளில் ஏதும் குறைபாடுகள் காணப்படின் தங்கள் பகுதி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக தனக்கு அறியத் தருமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-15)

# பார்த்தீனியச் செடியை கட்டுப்படுத்த சிரமதானப்பணி முன்னெடுப்பு



ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள ஒட்டுசுட்டான் நகரப்பகுதியில் நேற்றைய தினம் பார்த்தீனியச் செடிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் கமநல அபிவிருத்தித் திணைக்களம், தபால் திணைக்களம், பிரதேச செயலகம், சுகாதாரத்திணைக்களம், இலங்கை வங்கி, ஒட்டுசுட்டான், கூட்டுறவுசங்கம், பிரதேச சபை. தன்னார்வ, தொண்டு நிறுவனங்கள் மற்றும் கமக்கார அமைப்புகள் போன்றவற்றில் இருந்து பிரதிநிதிகள் மற்றும் அப்பிரதேச பொதுமக்கள் கலந்து கொண்டு இச்சிரமதான பணியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (5)




# முக்கொம்பன் பிரதான வீதி சேதம்; சீர் செய்யுமாறு மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் கிராமத்தின் பிரதான வீதியானது மிக நீண்ட காலமாக அமைக்கபடாதமையால் தாம் பெரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தை மேற்கொள்வதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

1990 ஆண்டு பூநகரி மக்கள் இடம்பெயர்வு காரணமாக மிக நீண்ட காலமாக தோட்டம் செய்யப்பட்ட கிராமமான முக்கொம்பன் கிராமத்தில் படிப்படியாக குடியேறத் தொடங்கினர்.

தற்போது 300க்கு மேற்பட்ட குடும்பங்கள் இக்கிராமத்தில் வசித்து வருகின்றனர்.

தோட்டச் செய்கையை பிரதான தொழிலாக மேற்கொள்ளும் இக்கிராமத்தின் சுமார் 2 கிலோமீற்றர் நீளம் கொண்ட வீதி அமைக்கப்படாமையால் முக்கொம்பன் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மழைகாலங்களில் இவ் வீதியில் பயணம் செய்வோர் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே இவ் விடயத்தினை உரிய தரப்பினர் கவனத்தில் கொண்டு இவ்வீதியை கால தாமதமின்றி கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (5-23)


# பொதுச்சபைக் கூட்டம் பிற்போடல்

(கிளிநொச்சி)

இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக, சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

எனவே, குறித்த பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு கிளிநொச்சி பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவும், கூட்டம் பற்றிய நிகழ்ச்சி நிரல் சகல உறுப்பினர்களுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும், கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (5)

# விவசாயத்திணைக்களத்தினால் நிரந்தர பயிர்ச் சிகிச்சை முகாம்




முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தினால் நிரந்தர பயிர்ச்சிகிச்சைமுகாம் யோகபுரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் நேற்றுக் காலை 7 மணிக்குநடத்தப்பட்டது.

இதில் பல விவசாயிகள் கலந்துகொண்டு தங்களின் தோட்டங்களில் நோய் மற்றும் பீடை தாக்கங்களை கட்ப்படுத்துவதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொண்டனர்.

மேலும் இப்பயிர்ச் சிகிச்சை முகமானது நிரந்தரமாக மல்லாவி பொதுச்சந்தையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் எனவும் விவசாயிகள் தங்கள் பயிர்களில் ஏற்பட்டுள்ள நோய் மற்றும் பீடைதாக்கங்களின் மாதிரிகளுடன் இப்பயிர்ச் சிகிச்சைமுகாமில் கலந்து கொண்டு அதனை கட்டுப்படுத்துவதற்கான ஆலோச்னைகளை பெற்றுக்கொள்ளுமாறும் முல்லைத்தீவு மாட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (5)

# மதகுடன் மோதியது ஹயல் வாகனம்; சிறு காயங்களுடன் சாரதி உயிர்தப்பினார்



(மல்லாவி)


மல்லாவியில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த ஹயஸ்ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியில் இருந்த மதகு ஒன்றின் தடுப்புச்சுவரில் மோதி தடம்புரண்ட விபத்துச் சம்பவத்தில் சாரதி சிறுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம், நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்யும் பணியாளர்களை கடமை முடிந்த நிலையில் மல்லாவியில் உள்ள அவர்களது வீடுகளில் இறக்கிவிட்டு மீண்டும் கிளிநொச்சி நோக்கி மாங்குளம் ஊடாக பயணித்த வேளை மாங்குளம் புகையிரத நிலையத்திற்கு அண்மையாகவுள்ள வளைவில் அதிவேகத்தில் வந்து திரும்பிய போது. வீதியில் இருந்த பாலத்தின் தடுப்புச்சுவரில் மோதுண்டு தடம் புரண்டுள்ளது.

இச்சம்பவத்தில் சாரதி மட்டுமே பயணித்த நிலையில் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (5-15)

# சந்தைப்படுத்தலுக்கான கட்டடத் தொகுதி வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது



வவுனியா சமுர்த்தி மாதிரி கிராம வேலைத்திட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் கட்டடத்தொகுதி நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஓமந்தை கிராமம் மாதிரிக்கிராமமாக தெரிவு செய்யப்பட்டு பல்வேறு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது ஓமந்தை பகுதி பயனாளிகளுக்காக சந்தைப் படுத்தலுக்கான நான்கு கடைத்தொகுதிகளும் 40 இலட்சம் ரூபா பெறுமதியில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் நீல் பண்டார கப்புகின்ன, சமுர்த்தி பணிப்பாளர்களான அனுர குனசேகர வென்னப்புலி, கே.கே.எல்.சந்திர திலக, சி.டி. களுஆராச்சி, ஜே.கே. பத்மசிறீ, ரி.என். சஞ்சிவ்வாணி, பிரதி பணிப்பாளர் ரணவீர மற்றும் வவ்னியா பிரதேச செயலாளர் கா. உதயராசா, சமுர்த்தி மாவட்ட பணிப்பாளர் திருமதி ச. பத்மரஞ்சன், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (5)

# உள்ளூராட்சி தேர்தல்

# வாக்கெடுப்பு சட்ட திருத்தங்கள்; அறிவுறுத்தும் பயிற்சிப் பட்டறை

(குருமன்காடு)

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் வாக்கெடுப்புச் சட்டத் திருத்தங்கள் மற்றும் அது பற்றிய பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை அறிவுறுத்தும் பயிற்சி பட்டறை நேற்றுக் காலை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் பெண் பிரதிநிதித்துவம் ஒன்றின் அவசியம் தொடர்பாக கருத்தரங்கம் நடைபெற்றது.

அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம். எம். மொகமட் உள்ளூரதிகார சபைத்தேர்தல் வாக்கெடுப்புச்சட்டத் திருத்தங்கள் மற்றும் பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பாக விரிவுரையையும் நடத்தியிருந்தார். (5-250)

## முள்ளிவாய்க்கால் நினைவுக்கல் விவகாரம்; அருட்தந்தை மீது மீண்டும் கடும் விசாரணை

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கிழக்கு சின்னப்பர் தேவாலயத்தில் போரில் இறந்த 500 பொது மக்களர் நினைவாக நினைவுக்கற்களை பதிக்க ஏற்பாடு செய்த சிவில் சமூக செயற்பாட்டாளர் அருட்தந்தை எழில்ராஜன் அடிகளார் மீது மீண்டும் மூன்று மணிநேர கடும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு நேற்று அவரை வருமாறு அழைத்த பொலிஸார் நினைவுப் படிமங்கள் யாருடையவை, அவர்கள் எவ்வாறு இறந்தார்கள், அதில் விடுதலைப்புலிகளின் பெயர்கள் இருந்தனவா என்ற கோணத்தில் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தினர்.

இதனையடுத்து அந்த நினைவுப் படிமங்களை செய்த சிற்பச்சாரியாரையும் அழைத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அருட்தந்தை சட்டத்தரணியின் உதவியுடன் உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு சென்று வாக்கு மூலத்தை வழங்கியிருந்தார்.

இதேவேளை, கடந்த 17 ஆம் திகதி இரவு 8 மணிக்கு முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அருட்தந்தை எழில்ராஜன் விசாரணையின் பின் இரவு 9.30 இற்கு விடுவிக்கப்பட்டமையும், படிமக்கற்களை நடுவதற்கு முல்லைத்தீவு நீதிமன்றம் ஊடாக பொலிஸார் தடை உத்தரவைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (5-250)

## சிறுவர் பாதுகாப்பு இல்லம் சுகாதார அமைச்சரால் திறந்து வைப்பு


வவுனியாவில் சிறுவர் பாதுகாப்பு இல்லம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால் உத்தியோக பூர்வமாக நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்போது வைரவப் புளியங்குளத்தில் உள்ள சிறுவர் பாதுகாப்பு இல்லமே திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் விஸ்வரூபன், மாவட்ட சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் மனோகரராஜா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் செயலாளர் சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் இணைப்பாளர் பா.சிந்துஜன், வவுனியாவை சேர்ந்த சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவேளை பொலிஸ் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம்

## நள்ளிரவில் பளை நகரப் பகுதியில் பதற்றம்






(மல்லாவி)

பளை பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பளை நகரப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லும் ஏ- 9 வீதியில் இருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் உள்ள கச்சார்வெளி கிராமத்திற்கு செல்லும் வீதிக்கு அண்மையாக பளைப் பொலிஸ் நிலையத்தில் இருந்து வீதிக் காவல் கடமை நிமிர்த்தமாக சென்ற நடமாடும் மோட்டார் கார் பாதுகாப்பு அணியினர் மீது இனம் தெரியாத நபர்கள் மறைந்திருந்து துப்பாக்கி சூடு நடத்தியுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வீதிப் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் மோட்டார் கார் அணியினர் மீது ஏ 09. வீதியில் இருந்து கச்சார்வெளி வெளிக் கிராமத்திற்குச் செல்லும் வீதி வளை விற் கும்புகையிரதப் பாதைக்கு இடையில் உள்ள பனை மரக் கூடலில் இருந்து துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொள் எப் பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் போது, துப்பாக்கி சூடு நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந் நிலையை அடுத்து 1000 மேற்பட்ட இராணுவத்தினரும், பொலிஸாரும் இரவோடு இரவாக குவிக்கப்பட்டு வீதிகளில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர். தேடுதல் வேட்டையிலும் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை நேரத்தில் கச்சார்வெளி வெளிக் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதி தொடக்கம் கிராம வீதிகள் வரை மறிக்கப்பட்ட நிலையில், பளைப் பொலிஸார் பொதுமக்களை வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் என ஒலி பெருக்கி மூலம் அறிவித்து விட்டு வீடு வீடாக இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

ஆயினும் சந்தேகத்திற்கிடமான வகையில் எவரும் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை, துப்பாக்கிச் சூடு நடைபெற்ற இடத்தில் தடயவியல் நிபுணர்கள் தேடுதல் நாத்திய போது ரி-56, துப்பாக்கியின் பகுதி ஒன்றை மீட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது பொலிஸார் தரப்பில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை.

அத்துடன், அவர்கள் பயணம் செய்த மோட்டார் காருக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படவில்லை.

துப்பாக்கிச் சூடு நடைபெற்ற இடத்திற்கு அருகே இருந்த புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான தொலைத்தொடர்புக் கருவி இணைப்புக்கள் பாது காப்பாக வைக்கப்பட்டிருந்த பெட்டிக்கு துப்பாக்கிச்சூடு பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் புலனாய்வு பிரிவினர் மற்றும் பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் விசேட பொலிஸ் அணியினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-15-312)




# கேப்பாப்பிலவில் 432 ஏக்கர் காணி ஒருமாத காலத்தினுள் விடுவிக்கப்படும் எதிர்க்கட்சித் தலைவர் உறுதிமொழி



(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு படையினர் வசமுள்ள 432 ஏக்கர் காணிகள் ஒரு மாதத்துக்குள் விடுவிக்கப்படும் என நேற்று முன்தினம் கேப்பாப்பிலவு நில மீட்பு போராட்டக் களத்திற்கு விஜயம் மேற்கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உறுதியளித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு பங்கேற்பதற்கு முல்லைத்தீவுக்கு வருகை தந்த எதிர்க்கட்சி தலைவர் தமது காணிகளை விடுவிக்கக்கோரி 81 நாட்களாக போராடி வரும் கேப்பாப்பிலவு மக்களை நேரில் சென்று சந்தித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

கேப்பாப்பிலவு இராணுவ முகாம் அமைந்துள்ள இடத்தைச் சென்று பார்வையிட்டோம். அதற்குப் பொறுப்பாக இருக்கும் அதிகாரியான பெர்னாண்டோ உட்பட படை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

அங்கு 243 ஏக்கர் காணி உடனடியாக விடுவிக்கக் கூடிய நிலையில் உள்ளது. 189 ஏக்கர் காணியை ஒரு மாதத்துக்குள் விடுவிப்பதாக நிச்சயமாகச் சொல்கிறார்கள். அதனை விரைவாக விடுவிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். மேலும் 111 ஏக்கர் காணியை விடுவிப்பதற்குத் தமக்கு 6 மாத காலம் தேவைப்படுவதாக இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் 100 மில்லியன் ரூபா நிதியும் அதற்குத் தேவையாக உள்ளது என்றும், அதை விரைவாக விடுவிப்பதற்கு முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் கேப்பாப்பிலவில் 543 ஏக்கர் காணியை விடுவிக்கக்கூடிய நிலைமை உள்ளது. மிகுதி 70 ஏக்கர் காணி அவர்களது கட்டடங்கள், முகாம்கள் அமைந்துள்ள நந்திக் கடல் பகுதியாக உள்ளது. அதை விடுவிக்கும் நோக்கம் அவர்களுக்கு இல்லை. அதில் இருந்து தாங்கள் வெளியேறுவதாக இருந்தால் 400 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

அவர்களைப் பொறுத்தவரை அந்தக் காணியில் இருந்து விலகும் நோக்கம் இல்லை. ஆனால் மக்களின் காணியில் இருந்து நீங்கள் விலகவேண்டும் என்றே மக்கள் சொல்லுகிறார்கள்.

இது தொடர்பில் அரச தலைவருடனும், இராணுவத் தளபதியுடனும் கலந்துரையாடி நல்ல முடிவுகள் எடுக்கப்படுமென அவர்மேலும் தெரிவித்தார். (5-250-281)

## மன்னார் மாவட்ட செயலகத்தின் புதிய கட்டடத் தொகுதி பிரதமரால் திறந்து வைப்பு

(மன்னார்)

மன்னாரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மன்னார் மாவட்ட செயலக நான்கு மாடிக் கட்டடத் தொகுதியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் 10 மணியளவில் வைபவ ரீதியாக திறந்து வைத்துள்ளார்.

குறித்த கட்டடத்தொகுதி மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளதுடன், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுமார் 305 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இத் திறப்பு விழா நிகழ்வானது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றுள்ளது.


இதன்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து அமைச்சர்களான வஜிர அபேவர்த்தன, றிசாட் பதியுதீன், டி.எம்.சுவாமிநாதன், சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான், பா.டெனீஸ்வரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து புதிய மாவட்ட செயலக கட்டடத்தொகுதிக்குச் சென்று பிரதமர் உத்தியோக பூர்வமாக கையொப்பமிட்டு பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்த நிலையில் இந்த மாவட்ட செயலக மைதானத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, காணி உறுதிப் பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய மாவட்ட செயலக கட்டடத் தொகுதியை திறந்து வைக்க வுள்ளார் என்ற செய்தியை அறிந்த மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக பதாகைகளையும் கறுப்பு கொடிகளையும் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

# கொழும்பில் கொட்டித் தீர்த்த மழை திணைக்களத்தில் ஏற்பட்ட விசித்திரம்




கொழும்பின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் அடைமழை பெய்தமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதியில் பெய்த அடைமழை, பலத்த காற்று காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்தமையால் பல பகுதியில் மின்சாரம் தடைபட்டதுடன் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

எனினும் கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களத்தின் டிஜிட்டல் திரையில் நேற்று 0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியையே காட்டியுள்ளது. விசித்திரமான வானிலை தகவலை காட்டிய ஒரு புகைப்படம் வெளியாகி உள்ளது.

தினசரி வானிலை அறிக்கையை காட்டுவதற்காக குறித்த டிஜிட்டல் திரை பொருத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் துறையின் அதிகாரி ஒருவரை தொடர்பு கொண்டு வினவிய போது, சமீபத்தில் தானாவே பதிவாகும் காட்சி முடங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை கொழும்பில் மழை பெய்யாத நிலையில், அன்றைய தினம் காணப்பட்ட 0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியே நேற்று முன் தினம்கூடும்மழையின்போதும் காட்சியளித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (இ-7)

# ‘அவலத்துக்கு ஆண்டு எட்டு; அரசியல் தீர்வோ இல்லை’

## அரியநேத்திரன் கவலை



“முள்ளிவாய்க்கால் அவலம் நடந்தேறி எட்டு ஆண்டுகள் கடந்துள்ளன. ஜனாதிபதி மாறியுள்ளார், ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆனால், எங்கள் மக்களுக்கான அரசியல் தீர்வு இதுவரை கிடைக்கவில்லை” என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு, வாகரைப் பிரதேசத்திலுள்ள ஸ்ரீசெல்வவிநாயகர் கோவில் முன்றலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியபோது, “உயிர் நீத்த சுமார் 150,000 மக்களுக்கான நீதி உள்நாட்டு விசாரணை மூலமோ அல்லது சர்வதேச பொறிமுறை மூலமாகவோ இதுவரை கிடைக்கவில்லை என்ற ஏக்கத்துடன் இன்றும் எமது உறவுகளை நினைவுகூருகின்றோம்.

மேலும், இந்த ஆண்டு முடிவதற்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்” என அவர் மேலும் வலியுறுத்தினார். (இ-7)

# வெள்ளவத்தை கடலில் ஒதுங்கிய திமிங்கிலம்



(கொழும்பு) வெள்ளவத்தை கடலில் உயிரிழந்த நிலையில் திமிங்கிலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

கரை ஒதுங்கிய திமிங்கிலம் கிட்டத்தட்ட 15 அடி நீளத்தை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திமிங்கிலத்தை பார்வையிடுவதற்கு மக்கள் அதிகமாக வருவதனால் அந்த பகுதி வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

திமிங்கிலம் உயிரிழந்து பல நாட்களாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# தலை சிதறி ஒருவர் பலி

மட்டக்களப்பு, படுவான் கரை கோயில்போரதீவு பிரதான வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் தலை சிதறி ஒருவர் பலியாகியுள்ளார்.


மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மீது பின்னால் வந்த கனரக வாகனம் மோதியதன் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பெரிய போரதீவு பட்டாபுரத்தை சேர்ந்த பிள்ளையான் தம்பி-கிருஸ்ணபிள்ளை என்பவர் சம்பவ இடத்தில் தலை சிதறி பலியாகியுள்ளார்.

அவருடன் சென்ற புண்ணியமூர்த்தி என்பவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

# தமிழீழ தேசியக் கொடி அகற்றப்பட்டது





பிரித்தானியாவில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் போட்டி நிகழ்வின் போது தமிழின உணர்வாளர் ஒருவரால் நாட்டப்பட்ட தமிழீழ தேசியக் கொடி, இனந் தெரியாத நபர்களால் பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை ஹைட் பூங்காவில் முள்ளிவாய்க்கால் போட்டி நிகழ்வு நடைபெற்றது.

இந்நிலையில் அங்கு சென்ற தமிழின உணர்வாளர் ஒருவர், துணிச்சலுடன் பிரித்தானிய தமிழர் பேரவையின் போட்டி முள்ளிவாய்க்கால் நிகழ்வு மேடை முன்பாக தமிழீழத் தேசியக் கொடியை நடுகை செய்திருந்தார்.

அப்போது அங்கு பாதுகாப்பாளர்களின் மேலங்கியையும், தலையை மூடும் முகக்காட்டையும் அணிந்தவாறு புகுந்த குண்டர்கள், தமிழீழ தேசியக் கொடியைப் பிடுங்கி எறிந்து அதனை அவமதித்தனர். இக் காட்சி அங்கு நின்ற தமிழின உணர்வாளர்கள் சிலரால் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரித்தானிய தமிழர் பேரவையினர், தமிழீழ தேசியக் கொடிக்குப் பின்னால் தமிழர்கள் அணிதிரள்வதில்லை என்ற கருத்தை வெளியில் தெரிவித்து வரும் நிலையில் இந்த அடாவடித்தனம் பிரித்தானியா வாழ் தமிழீழ மக்களைப் பெரும் கொந்தளிப்பிற்கு ஆளாக்கியிருக்கின்றது. (இ-9)

# எனது மகனும் சைட்டத்தில்தான் கல்வி கற்கிறார்

## அமைச்சர் விஜயமுனி விளக்கம்



தனது மகனும் சைட்டம் தனியார் வைத்தியக் கல்லூரியில் கல்வி கற்றுவருவதாக நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சைட்டம் தனியார் கல்லூரியை மூடினால் தான் அனைத்து பிரச்சினைகளும் தீருமென்றால் அதனை செய்ய முடியும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் ஏனைய தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளையும் மூட வேண்டிய நிலை ஏற்படக்கூடும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படும் நபர்களைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை- ஜோன் அமரதுங்க



(கொழும்பு) அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் நபர்களைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க எச்சரித்துள்ளார்.

நாத்தாண்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் ஜோன் அமரதுங்க இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இந்த அரசாங்கம் இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படுவதன் காரணமாக இன்னும் மூன்று வருடங்களுக்குள் பதவியில் இருக்கும்.

எனவே 2020 வரை இனி முக்கியமான தேர்தல் எதுவும் நடைபெறாது. பொதுத் தேர்தல் நடைபெற மாட்டாது.

அதே நேரம் இந்தக் காலப்பகுதிக்குள் அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் நபர்களை இனம் கண்டு, அவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க இதன்போது தெரிவித்துள்ளார். (இ-7)

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–118

# வடமாகாணத்தின் அபிவிருத்தியை மையப்படுத்திய ஆய்வுகள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நாம் வாழும் காலம் எமது பிரதேசத்து வளர்ச்சியில் மிக முக்கியமானது. நீண்டதொரு போர்ச்சூழலில் சிக்கி சின்னாபின்னப்பட்ட பிரதேசம் மீண்டெழும்னையும் போது அதற்கு தேவையான புலமையாளர்களின் ஆலோசனையும் திட்ட முன்மொழிவுகளும் இன்னும் தனியார் துறை வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பும் வேலைத்திட்டங்களும் வலிந்து உருவாக்கப்பட வேண்டியதாயிருக்கின்றது.

போர் முடிந்தபின் 7 வருடங்கள் கழிந்த நிலையில் தனியார் துறையின் விருத்தி நாம் எதிர்பார்த்தவாறு இருக்கவில்லை. இதற்குக் காரணங்கள் பலவாயினும் அபிவிருத்தித் திட்டங்களில் துறைசார் புலமையாளர்களின் உள்வாங்கல் போதாமை என உணரமுடிகின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 134

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தார்மீக கடமையொன்றுண்டு. தேசியமட்டத்திலும் மாகாண மட்டத்திலும் பல்வேறு துறைகளில் பட்டப்படிப்புக்கான உயர்பட்டப் படிப்புக்கான கல்வியைப் போதிக்கும் அதேநேரத்தில் தேசியமட்டப் பிரச்சினைகளையும் மாகாண மட்ட பிரச்சினைகளுக்கும் ஆய்வுரீதியாக தமது புலமைசார்ந்து ஆலோசனைகளை வழங்க முன்வர வேண்டும் என்பதுதான்.

தேசிய மட்டத்து பிரச்சினைகளை முகங்கொடுக்க அனைத்து பல்கலைக்கழகங்களும் இணைந்து முன்வரும் போது மாகாண மட்ட பிரச்சினைகளை அபிவிருத்தி சார்ந்த திட்ட வரைபுகைள் உருவாக்குவதற்கும் அதன் மூலம் இங்குள்ள இளைய சமுதாயத்திற்கான வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான உத்திகளை வரைவதற்கும் புலமைசார் நிபுணர்களின் தேவை அவசியமாகின்றது.

புலமைசார் நிபுணர்களின் ஆலோசனையை பெற்றுவிட்டு பின்னர் அவர்களை விமர்சிக் கும் போக்கும் இப்போது உருவாகி வருகின்றது.

கல்வியியலாளர்கள் அரசியல் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு தமது புலமைசார்ந்து ஆலோசனைகளை வழங்க அனுமதிக்க வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைந்ததற்கு முக்கிய காரணங்களுள் இப்பிரதேசத்து வளர்ச்சியில் அங்குள்ள புலமைசார் நிபுணர்களின் பங்களிப்பும் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தீட்டப்பட்டு அதன்மூலம் கிடைக்கின்ற நிதியை முழுவதுமாக மக்கள் பயன்பெறும்வண்ணம் பயன்படுத்த உதவவேண்டும்.

அதைவிடுத்து வெளிநாட்டு நிறுவனங்களின் மற்றும் உலகளாவிய நிறுவனங்களின் நிதியை நாம் பெறுவதற்கான தகுந்த அபிவிருத்தி திட்டங்களை புலமைசார் நிபுணர்களின் ஆலோசனைகளை பெறாது விடுவதனால் அவை எமக்கு கிடைக்காமலும் நிதிக்காக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அதனை முழுவதுமாக பயன்படுத்தாமலும் போகின்ற நிலையை அவதானிக்க முடிகின்றது.

இதற்காக வெறுமனே மாகாண சபையையோ அல்லது புலமையாளர்களையோ குறைகூறாது எமது தேசத்தின் அபிவிருத்திக்கான பணியில் அனைவரும் ஒற்றுமையாக சேர்ந்து பணியாற்ற முன்வரவேண்டும்.

வடமாகாண அபிவிருத்தி திட்டங்களை வரைவதற்கான அனைத்து புள்ளிவிபரங்களும் திரட்டப்பட்டால் அவற்றை வைத்துக்கொண்டு மக்கள் நன்மையடையும் பல திட்டங்களை உருவாக்க முடிவதுடன் அவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டையும் பெறுவதற்கும் உதவமுடியும். இதற்காக மாகாண அபிவிருத்தி திட்டங்கள் சார்ந்து இன்னும் தனியார் தொழிற்றுறையினை உருவாக்குவதற்கு திட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும். இளைய சமுதாயத்தின் வேலையில்லாத் திண்டாட்டத்தினை தீர்ப்பதற்கான வழிவகைகள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழிவகைகளையும் உருவாக்க வேண்டும்.

வடமாகாணத்து அபிவிருத்தியை மையப்படுத்திய ஆய்வுகளுக்கு பல்கலைக்கழகத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அனைத்து துறை சார்ந்த நிபுணர்களின் உதவியுடன் .சமகால பிரச்சினைகளை ஆராய்ந்து தனியார் தொழிற்றுறையை ஊக்குவிப்பதற்கான வழிவகைகளை பரிந்துரைக்க பல்கலைக்கழக நிபுணர்கள் சமூகம் முன்வரல் வேண்டும். அதற்காக பல்துறை ஆய்வுகளை அனைத்து துறைகளிலும் முடுக்கி விட்டு வேலைவாய்ப்பினை அதிகரிப்பதற்கும் குறிப்பாக சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவதற்கும் அத்துறைசார்ந்த சேவைகளை வழங்கும் துறைகளை இன்னும் அபிவிருத்திக் குள் உள்வாங்கி வடபுலத்து மக்களுக்கு வேலை வாய்ப்பினை கிடைக்கக் கூடியதாக செய்தல் வேண்டும்.

வடமாகாணத்தின் அபிவி ருத்தி என்பது தனிநபர் உருவாக்கமோ அல்லது ஒரு குழுவின் செயற்பாடோ அல்ல. இது மக்கள் மயப்படுத்த அபிவிருத்தி திட்டமாக பரிணமிக்கும் போது அனைத்து மக்களுக்கும் அவரவர் தேவைக்கேற்ப வேலைகளை பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.




ஆராய்ச்சியில் இருக்கின்ற வளங்கள் சார்ந்து அவற்றை வினைத்திறனாக பயன்படுத்துவது பற்றி இன்னும் மதிப்பேற்றஞ் செய்த பொருட்களை சந்தைப்படுத்தல்சார்ந்து அனைத்து துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான ஆய்வரங்காக மாற்றி அனைத்து துறை நிபுணர்களையும் ஒருங்கிணைத்து இத்திட்டங்களை வரைந்து அதனை செயற்படுத்துவதில் அனைவரும் பங்கெடுக்க வேண்டும். இதில் மாணவர்களையும் ஒன்றிணைப்பது இன்னும் நன்மை தரும். மாணவர்களின் சமூக கடப்பாடு இத்தகைய திட்டாங் களைத் தீட்டி நடைமுறைப்படுத்தும் போது இன்னும் மேன்மைபெறும்.

பல்கலைக்கழகமும் 'சமூகமும் இணைந்த ஆய்வரங்கை நடத்துவதற்கு திட்டங்கள் தீட்டப்படுவதும் அதன்மூலம் வடமாகாண்ணத்திற்கு தேவையான அபிவிருத்தி திட்டங்களை வரைவதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் காலத்தின் கட்டாயமாகும்.

# போராட்டத்தில் ஈடுபடவுள்ள பாடசாலை அதிபர்கள்

எதிர்வரும் 24 ஆம் திகதி பாடசாலை அதிபர்கள் தொழிற்சங்க போராட்டம் ஒன்றில் ஈடுபட உள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 24 ஆம் திகதி சுகயீன விடுமுறை எடுத்துக் கொள்ளுமாறு 11 ஆயிரம் பாடசாலை அதிபர்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

அதிபர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் கொழும்பில் அன்றைய தினம் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்கு சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், சுயாதீன கல்வி சேவைச் சங்கம் உள்ளிட்டன இணைந்து உருவாக்கியுள்ள அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கக் கூட்டமைப்பினால் இந்தக் கூட்டம் நடத்தப்பட உள்ளது.

மேலும், கடந்த 2009 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்குதல், கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட அதிபர்களுக்கு உரிய பாடசாலைகளை வழங்குதல் உள்ளிட்டன குறித்த இந்த கூட்டத்தில் பேச்சு வார்த்தை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உ.பியில் கன மழையால் 32 பேர் உயிரிழப்பு!

(லக்னோ)

**உத்தரபிரதேசத்தில் இடி, மின்னலுடன் பெய்த கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. இந்த மழையில் கட்டடங்கள் இடிந்தது உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களில் 32 பேர் பலியாகினர்.**

உத்தரபிரதேசத்தின் கான்பூர், பண்டல்கந்த் பிராந்தியம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. இடி, மின்னலுடன் பெய்த இந்த பேய் மழையால் பல இடங்களில் வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

மேலும் சூறாவளிக்காற்றினால் மரங்கள், மின்கம்பங்கள் முறிந்தும் பலத்த சேதங்கள் ஏற்பட்டன.

இந்த சம்பவங்களில் சிக்கி 32 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பரேக் மாவட்டத்தில் மட்டும் 8 பேர் பலியாகினர்.

இந்த மாவட்டத்தில் 200-க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்தன.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது.

உத்தரபிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழை அளவை வானிலை ஆய்வுமையம் வெளியிட்டுள்ளது. அதன்படி பரேக் மாவட்டத்தில் 43.8 மி.மீ., பாஸ்டியில் 37 மி.மீ., ஹர்தோயில் 12 மி.மீ. மற்றும் கோரக்பூரில் 6.5 மி.மீ. அளவு மழை பெய்திருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.


இதைப்போல மாநிலத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

பல இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளதால், மக்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளனர். (இ-3)

100 கோடி ரூபாய் பெறுமதியான

# விஜய் மல்லையாவின் பண்ணை வீடுபறிமுதல்

## அமுலாக்கத்துறை நடவடிக்கை



(டில்லி)

விஜய் மல்லையாவின் ரூ.100 கோடி பண்ணை வீட்டை அமுலாக்கத்துறை பறிமுதல் செய்துள்ளது. வீட்டின் சுவரில் இதற்கான நோட்டீசை அமுலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் ஒட்டினர்.

வங்கிகளில் பெற்ற ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் கடனை திருப்பிச் செலுத்தாமல், பிரபல தொழில் அதிபர் விஜய் மல்லையா லண்டனுக்கு சென்று விட்டார்.

அவர் சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டது பற்றி அமுலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்த வழக்கின் அடிப்படையில், மராட்டிய மாநிலம் ரெய்காட் மாவட்டம் அலிபாக் என்ற இடத்தில் கடற்கரையோரத்தில் உள்ள பண்ணை வீட்டை அமுலாக்கத்துறை கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் தற்காலிகமாக முடக்கி வைத்தது.


17 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த வீடு, விஜய் மல்லையா கட்டுப்பாட்டில் இருந்த ஒரு நிறுவனத்துக்கு சொந்தமானது ஆகும்.

தற்காலிக முடக்கத்தை எதிர்த்து அந்த நிறுவனம் தொடர்ந்த மனுவை மேல் முறையீட்டு தீர்ப்பாயம் சமீபத்தில் தள்ளுபடி செய்தது. இதையடுத்து, பண்ணை வீட்டை அமுலாக்கத்துறை பறிமுதல் செய்துள்ளது.

வீட்டின் சுவரில் இதற்கான நோட்டீசை அமுலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் ஒட்டினர்.

பத்திரப்பதிவில் ரூ.25 கோடி மதிப்பு என காட்டப்பட்ட இந்த வீட்டின் சந்தை மதிப்பு ரூ.100 கோடி ஆகும். (இ-7)

# சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நீதிபதி ஜனாதிபதியை சந்திக்க முயற்சி



(டில்லி)

உச்ச நீதிமன்ற நீதிபதிகளால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி கர்ணன் ஜனாதிபதியை சந்தித்து முறையிட இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உச்ச நீதிமன்ற நீதிபதிகளுடன் தொடர்ந்து மோதல் போக்கை கடைப்பிடித்து வரும் கொல்கத்தா உச்ச நீதிமன்ற நீதிபதி கர்ணன், தலைமை நீதிபதி உள்ளிட்ட 7 நீதிபதிகளுக்கு சிறைத் தண்டனை விதித்து பரபரப்பு தீர்ப்பளித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு கர்ணனுக்கு 6 மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டது.

நீதிபதி கர்ணனை கைது செய்ய கொல்கத்தா பொலிஸார் கடந்த சில நாட்களாக சென்னையில் முகாமிட்டிருந்த போதிலும், அவர் தலைமறைவாக உள்ளதால் கைது செய்ய முடியவில்லை.

இந்நிலையில் தன் மீதான சிறைத் தண்டனையை இரத்து செய்யக்கோரி கர்ணன் உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவை விசாரித்த நீதிமன்ற அமர்வு இவ்வழக்கை அவசரமாக விசாரிக்க மறுப்பு தெரிவித்தது.

மேலும், கர்ணன் சார்பில் வாதாடிய அவரது சட்டத்தரணி, கர்ணனுக்கு சிறைத் தண்டனை அளிக்கப்பட்ட விவகாரத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதற்கு ஆட்சேபம் தெரிவித்த நீதிபதிகள் உங்களது தரப்பு வாதங்களை ஊடகங்களுக்கு அளிக்க தயாரா? எனக் கேள்வியெழுப்பினர்.

இம்மனு எப்போது விசாரணைக்கு வருகிறதோ, அப்போது எடுத்துக் கொள்கிறோம்.

அவசரமாக விசாரிக்க முடியாது. நீதிமன்ற நேரத்தை வீணடிக்காதீர்கள் என நீதிபதிகள் காட்டமாக கருத்துக்களை தெரிவித்தனர்.

இதனால், அதிருப்தியடைந்துள்ள நீதிபதி கர்ணன், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து முறையிட இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியல் சாசனத்தின் ஆர்டிக்கிள் 72 சட்டத்தில் ஒருவர்மீதான தண்டனையை குறைக்கவும், இரத்து செய்யவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருப்பதால் அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

# 21 மாவோயிஸ்ட்டுக்கள் சத்தீஸ்கர் மாநிலத்தில் சரணடைந்துள்ளனர்

(டில்லி)

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் 21 மாவோயிஸ்ட்டுகள் நேற்று முன தினம் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில், தீவிரவாதக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட லக்ஷ்மணன் மத்காமியும் உள்ளடங்குவதாகவும் இவரது தலைக்கு 2 இலட்சம் ரூபா சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சரணடைந்த அனைவருக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் பணம் வழங்கப்பட்டுள்ளதுடன் மாநில அரசின் சார்பில் அவர்களது மறுவாழ்வுக்கான திட்டங்கள் செயற்படுத்தப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுக்மா, பிஜாப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த சில தினங்களுக்கு நடவடிக்கையின் போது 15 மாவோயிஸ்ட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில், 21 மாவோயிஸ்ட்டுகள் சரணடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

பாரதச் செய்தி


# குடியரசுத் தலைவர் பதவிக்கு இரண்டாவது முறையாக பிரணாப்புக்கு வாய்ப்பளிக்க பா.ஜ.கவுக்கு விருப்பமில்லை

(டில்லி)

குடியரசுத் தலைவர் பதவிக்கு பிரணாப் முகர்ஜியை மீண்டும் தேர்ந்தெடுப்பதில் பாரதிய ஜனதாவுக்கு விருப்பமில்லை எனத் தெரியவந்துள்ளது.

தற்போதைய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலம் எதிர் வரும் ஜூலை 25ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதனால் புதிய குடியரசுத் தலைவருக்கான வேட்பாளரை தேர்வு செய்வதில் முக்கிய அரசியல் கட்சிகள் வேகம் காட்டத் தொடங்கியுள்ளன.

இதில், எதிர்க்கட்சிகளின் விருப்பப் பட்டியலில் பிரணாப்



முகர்ஜியும் இடம் பெற்றுள்ளார்.

இவருக்கு மறுவாய்ப்பு அளித்தால் அதை பாஜக தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி (என்டிஏ) ஆதரிக்கும் என்ற கருத்து நிலவியது.

ஆனால் பிரணாபுக்கு மறுவாய்ப்பு அளிப்பதில் பா.ஜ.க வினருக்கு விருப்பமில்லை எனத் தெரியவந்துள்ளது. (இ-3)

# சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு திருப்தி அளிக்கிறது

## பிரதமர் மோடி கருத்து

(டில்லி)

குல்பூஷன் ஜாதவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு சர்வதேச நீதிமன்றம் தடை விதித்தது திருப்தி அளிப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியமுன்னாள்கடற்படை அதிகாரி குல்பூஷன் ஜாதவுக்கு பாகிஸ்தான் இராணுவ நீதிமன்று விதித்த மரண தண்டனைக்கு சர்வதேச நீதிமன்றம் நேற்று முன்தினம் தடை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. இறுதி தீர்ப்பு வரும் வரை தூக்கிலிடக் கூடாது என்று 11 நீதிபதிகள் கொண்ட அமர்வு தெரிவித்துள்ளது.


சர்வதேசத்தின் தீர்ப்புக்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர். இந்தியாவுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று அரசியல் தலைவர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில், குல்பூஷன் ஜாதவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு சர்வதேச நீதிமன்றம் தடை விதித்தது திருப்தி அளிப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை தொடர்பு கொண்டு நன்றியை தெரிவித்தார்.

மேலும், இந்த வழக்கில் இந்தியா சார்பில் வாதாடிய சட்டத்தரணி ஹரிஷ் சால்வேக்கு பாராட்டுக்களைக் கூறினார்.

இதனிடையே, குல்பூஷன் ஜாதவை காப்பாற்ற மத்திய அரசு வாய்புள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (இ-3)



# இரட்டை இலை சின்னத்தை உடனடியாக மீட்க வேண்டும்

## நடராஜன் கூறுகிறார்



(தஞ்சாவூர்)

இரு அணிகள் ஒன்று சேர்ந்து இரட்டை இலை சின்னத்தை உடனடியாக மீட்க வேண்டும்என்று ம.நடராசன் தெரிவித்தார்.

இலங்கை முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி தஞ்சை விளார் சாலையில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில்நேற்று முன்தினம்நடந்தது.

நிகழ்ச்சியில் பங்கேற்ற புதிய பார்வை ஆசிரியர் ம.நடராசன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

எம்.ஜி.ஆரின் மறைவுக்கு பின்னர் அ.தி.மு.க.வின் இரட்டைஇலை சின்னம் முடக்கப்பட்டபோது டில்லிக்கு சென்று பெற்று வந்தவன் நான். இரட்டை இலை சின்னம் எனக்கு தான் சொந்தம் என்று உரிமை கொண்டாட எந்த தலைவருக்கும் அதிகாரம் கிடையாது.

தொண்டனுக்கு மட்டும் தான் அந்த உரிமை உண்டு. இரட்டை இலை சின்னத்தை முடக்க நினைப்பவர்கள் துரோகிகள் என்ற மனநிலையில் தான் தொண்டர்கள் உள்ளனர்.

அ.தி.மு.கவில் இருந்து பிரிந்து இருப்பவர்கள் இதுவரை செய்த தவறுகளை மறந்து, ஒன்றாக இணைய வேண்டும்அவர்கள்இணைந்து இரட்டைஇலை சின்னத்தை மீட்டு எம்.ஜி.ஆர். காட்டிய வழியில் செயற்பட வேண்டும். அப்படி ஒன்று சேர்ந்தால் நம்மை யாராலும் வீழ்த்த முடியாது.

ஜெயலலிதா அ.தி.மு.க பொதுச்செயலாளராக பொறுப்பேற்க தகுதியற்றவர் என்று வழக்கு தொடர்ந்த பி.எச். பாண்டியன் தான் தற்போது அ.தி.மு.க. பிளவு ஏற்பட காரணமாக இருப்பவர்.

இந்த சதியில் தொண்டர்கள் யாரும் சிக்கிக்கொள்ளவில்லை தொண்டர்கள் தெளிவாக இருக்கிறார்கள்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவிடாமல் ஜெயலலிதா சாதனை படைத்தார். அந்த சாதனையை மீண்டும்படைக்க முடியும். அதனால் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

காங்கிரஸ் அரசு செய்த தவறுகளை சரி செய்யும் மோடி அரசு, ஈழப்பிரச்சினையில் காங்கிரஸ் அர்சு செய்த தவறுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

இலங்கையில் தமிழீழ நாடு, சிங்கள நாடு என இரு நாடுகள் இருந்ததாக அவர்களுடைய மகாவம்சநூல் தெரிவிக்கிறது.

இந்த வரலாற்றை இந்திராகாந்தி நன்கு புரிந்து வைத்திருந்தார். இலங்கை வரலாற்றை மோடி புரிந்து கொண்டால் தமிழ்பூமி நிச்சயம் மலருமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# எல்லைப்பகுதியில் எட்டு நாட்களுக்கு பின்னர் ஓய்ந்த பாக்.இராணுவத்தினரின் அத்துமீறல்

(ஸ்ரீநகர்)

கடந்த எட்டு நாட்களாக எல்லைக்கோடு அருகே அத்துமீறி தாக்குதல் நடத்தி வந்த பாகிஸ்தான்இராணுவத்தினர் நேற்று முன்தினம் முதல் ஓய்ந்துள்ளதால், அப்பகுதியில் அமைதி திரும்பியுள்ளது.

காஷ்மீர் எல்லையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவம் அடிக்கடி அத்துமீறலில் ஈடுபடுகிறது.

சில தினங்களுக்கு முன்பு இந்தியாவுக்குள் ஊடுருவி வந்த பாகிஸ்தான் வீரர்கள், 2 இந்திய இராணுவ வீரர்களை சுட்டுக் கொன்று, அவர்களது தலையைத் துண்டித்து வெறியாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 10ஆம் திகதி முதல் எல்லைக்கட்டுப்பாடு கோடு அருகே உள்ள ரஜோரி செக்டாரில் பாகிஸ்தான் வீரர்கள், திடீரென அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டனர்.

சிறிய ரக பீரங்கிகளால், இந்திய எல்லையோர கிராமங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினார்கள். இதில் 2 பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் இராணுவத்தின் இந்த அத்துமீறலுக்கு இந்திய இராணுவம் தக்க பதிலடி கொடுத்து தடுத்து நிறுத்தியது.

அதோடு ரஜோரி செக்டாருக்கு கூடுதல் படைகள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்திய இராணுவத்தின் பதிலடியையும் பொருட்படுத்தாமல் கடந்த சில நாட்களாகவே ரஜோரி பகுதியில் இருக்கும் நவ்ஷேரா மற்றும் மஞ்சோக் ஆகிய இடங்களில் பாகிஸ்தான் இராணுவத்தினர் திடீர் தாக்குதல்களை நடத்தினர்.

அந்த எல்லையோரப் பகுதி மக்கள் மீது பீரங்கித் தாக்குதல்களை நடத்தினார்கள். மேலும், எந்திரத் துப்பாக்கிகளால் கண்மூடித்தனமாக சுட்டனர்.

பாகிஸ்தான் இராணுவத்தினரின் அத்துமீறலால் எல்லைப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளனர். இதுவரை சுமார் 1700 பேர் பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், அப்பகுதியில் நிலைமை சீராகும் வரை பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்திருந்தது.



இந்நிலையில், நேற்று முன்தினம் காலை முதல் பாகிஸ்தான் இராணுவத்தினர் எந்த தாக்குதல்களையும் மேற்கொள்ளவில்லை என ரஜோரி செக்டாரின் துணை ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதனால், நேற்று முன்தினம் அப்பகுதி எந்த பரபரப்புமின்றி அமைதியாக காணப்பட்டது. பாகிஸ்தான் இராணுவம் ஓய்ந்தாலும், இந்தியா தனது கண்காணிப்பை அப்பகுதியில் தொடர்ந்து மேற்கொண்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

8 நாட்களுக்கு பின்னர் அங்கு அமைதி நிலை திரும்பியுள்ளதால் உள்ளூர்வாசிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இன்னும் சில நாட்களுக்கு அங்கு பிரச்சினை ஏதும் ஏற்படாத பட்சத்தில் பாதுகாப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் மீண்டும் தங்களது சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட இருப்பதாகவும் தகவல்கள் தெரிவீக்கின்றன. (இ-3)

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்ய தலையீடு குறித்து விசாரிக்க எப்.பி.ஐ. ராபர்ட் முல்லர் நியமனம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு குறித்து விசாரிக்க உளவுத்துறை முன்னாள் இயக்குநர் ராபர்ட் முல்லர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த விசாரணையில், நாங்கள் குற்றமற்றவர்கள் என்பது நிரூபணமாகும் என ட்ரம்ப் கருத்து தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாக பரவலாக குற்றச்சாட்டு எழுந்தது. குறிப்பாக, குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவதற்காக ரஷ்யா பாடுபட்டது என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக அமெரிக்காவின் உளவுத்துறையான மத்திய புலனாய்வு அமைப்பு (எப்.பி.ஐ.) இயக்குநர் ஜேம்ஸ் கோமி (வயது 56) விசாரணை நடத்தி வந்தார். இந்த விவகாரத்தை அமெரிக்க பாராளுமன்றமும் ஆய்வு செய்து வருகிறது.

இந்த நிலையில் திடீரென ஜேம்ஸ் கோமியை, எப்.பி.ஐ. இயக்குநர் பதவியில் இருந்து ஜனாதிபதி ட்ரம்ப், சமீபத்தில் அதிரடியாக நீக்கி உத்தரவிட்டார்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ட்ரம்பின் பிரசாரத்தில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததா என்பது பற்றி நடக்கிற விசாரணைக்கு எப்.பி.ஐ. அமைப்பின் முன்னாள் இயக்குநர் ராபர்ட் முல்லர் அதிரடியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேர்மையான அதிகாரி என்று பெயர் பெற்றவர். 12 ஆண்டு காலம் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் ஒபாமா ஆட்சிக்காலங்களில் எப்.பி.ஐ. இயக்குநர் பதவி வகித்துள்ளார். இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை அமெரிக்க துணை அட்டார்னி ஜெனரல் ராட் ரோசன்ஸ்டீன் வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், "பொது நலன் கருதி, இந்த விசாரணையை சுதந்திரமான ஒரு வெளிநபர் கையில் ஒப்படைக்க வேண்டியதாயிற்று" என கூறியுள்ளார்.

இந்த நியமனத்தை ராபர்ட் முல்லர் ஏற்றுக் கொண்டுள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில், "என்னிடம் அளிக்கப்பட்டுள்ள பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். என்னால் இயன்ற அளவுக்கு இந்தப் பணியை சிறப்பாக செய்வேன்" எனக் குறிப்பிட்டார்.

ஜேம்ஸ் கோமி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறப்பு சட்டத்தரணி ஒருவரை நியமித்து ரஷ்ய தலையீடு குறித்த விசாரணையை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்காவில் வலுத்த தருணத்தில், இப்போது திடீர் திருப்பமாக ராபர்ட் முல்லர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவரது நியமனம் குறித்த உத்தரவில் அமெரிக்க துணை அட்டர்னி ஜெனரல் ராட் ரோசன்ஸ்டீன் கையெழுத்து போட்ட பிறகே ஜனாதிபதியின் வெள்ளை மாளிகைக்கே தெரிய வந்ததாம்.

அதே நேரத்தில் குடியரசு கட்சி, ஜனநாயக கட்சி என இரு கட்சிகளும் ராபர்ட் முல்லர் நியமனத்தை வரவேற்கின்றன.

இதுபற்றி ட்ரம்ப் கருத்து தெரிவிக்கையில், "எனக்கும், என் பிரசார அணிக்கும் எந்தவொரு வெளிநாட்டு அமைப்புக்கும் தொடர்பு இல்லை என்பதை உறுதி செய்து, நாங்கள் குற்றமற்றவர்கள் என்று எங்களுக்கு தெரிந்த தகவலை புதிய விசாரணை உறுதிப்படுத்தும்" எனக் கூறினார்.

எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் மூத்த தலைவரும், செனட் சபை எம்.பியுமான சக்ஸ்குமர் கருத்து தெரிவிக்கையில், "ராபர்ட் முல்லர் இந்தப் பணிக்கு மிகச் சரியான நபர்" என பாராட்டினார்.

செனட் சபையின் பெரும்பான்மை தலைவர் (குடியரசு கட்சி) மிட்ச் மெக்கன்னல், "இந்த நியமனம் விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்பதை உறுதி செய்கிறது" என கூறினார். (இ-3)

# அ.தி.மு.கவை தொண்டர்கள் இயக்கமாக மீட்டு எடுப்போம்

## ஓ.பி.எஸ்.நம்பிக்கை


(டில்லி)

அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணி பொதுச்செயலாளர் ஓ. பன்னீர்செல்வம் நேற்று டில்லி சென்றுள்ளார்.

அங்கு அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

அ.தி.மு.க.வை தொண்டர்கள் இயக்கமாக மீட்டு எடுப்போம். அதற்காக தொடர்ந்து பாடுபடுவோம். கோட்பாட்டில் இருந்து ஒருபோதும் நாங்கள் விலக வில்லை.

சசிகலா குடும்பத்தை வெளியேற்றினால்தான் இணைப்பு பேச்சு வார்த்தை தொடங்கும்.



ஜனாதி பதி தேர்தல் வேட்பாளர் அறிவித்தபின் ஆதரவு பற்றி முடிவு செய்வோம். இவ்வாறு அவர் கூறி னார்.

கே.பி. முனுசாமி கூறியதாவது,ரஜினிகாந்த் தமிழக அரசியல் பற்றி பேசி இருக் கிறார்.

ஒரு வார்த்தை பேசியதற்கே அவரால் தாங்க முடியவில்லை. அவர் அரசியலுக்கு வந்து பார்க்கட்டும். இங்கு எவ்வளவு சோதனைகள் ஏச்சுகள், பேச்சுகள் எப்படி இருக்கும் என்பதை அவர் வந்து பார்க்கட்டும்.

நடிப்பு தொழிலில் இருந்து அரசியலுக்கு வந்தால் எப்படி இருக்கும் என்பதை அவர் உணர்வார்.

இவ்வாறு அவர் கூறினார்.

ரஜினிகாந்த் நேற்று பேட்டியளித்தபோது,

அரசியல் கெட்டு போனதாக அ.தி.மு.க.வை மறைமுகமாக தாக்கினார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் கே.பி. முனுசாமி இவ்வாறு பதிலளித்தார். (இ-3)



Improve your English Skills
@ ICBT Jaffna Campus
DIPLOMA IN ENGLISH
Level 01 & Level 02 (2- 4 Months)
A General English course designed to cover and improve the four main language skills of Reading, Writing, Listening & Speaking.
Batch #6 | Monday, Wednesday 2.30 PM - 4.30 PM (Starts May, 22nd) | Duration: 4 Months
Batch #7 | Friday 6.00 PM - 8.00 PM (Starts May, 26th) | Duration: 6 Months
Batch #8 | Saturday, Sunday - 10.00 AM - 1.00 PM (Starts June, 24th) | Duration: 10 Weeks
Batch #9 | Saturday, Sunday - 2.30 PM-5.00 PM (Starts June, 24th) | Duration: 12 Weeks
0770 746 553
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk




DIPLOMA IN MARKETING & MANAGEMENT
After Exams, Invest your time and money on a recognized qualification which can support you in your future studies and employment.
BSc (Hons)
HND
Business (Management)
Diploma in Marketing Management
O/L or A/L
Batch #3 | Saturday, Sunday - 10.00 AM - 02.00 PM (Starts June, 24th) | Duration: 3 Months
0770 746 553
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk




IELTS
PREPARATION COURSE
IELTS Registration & Exam Preparation Classes
@ ICBT Jaffna Campus
All material used are updated and directly from UK.
Conducted by experienced and qualified lecturers.
Free Gift Pack with a CD for listening.
Why Study ICBT ?
Qualified Lecturer Panel
High Quality Learning Experience
Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/ Modern Lecture Halls.
Easy Payment schemes
Batch #2
Saturday, Sunday- 2.30 PM-5.30 PM (Starts June, 10th)
Duration: 04 Weeks
0770 746 553
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk




Improve your English Skills
@ ICBT Jaffna Campus
SPOKEN ENGLISH
Course Contents
Grammar & writing skills.
Speaking & Listening pronunciation, fluency & key features of spoken English.
Roleplay, reading & adaptation of modern method of communication.
Batch #1 | Saturday, Sunday - 2.00 PM - 5.00 PM (Starts July 1st) | Duration: 4 Weeks
0770 746 553
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk

# பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழு

(கொழும்பு)

முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் மீது முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் சந்தேக நபர்களை கைது செய்ய விசேட பொலிஸ் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜிதஜயசுந்தரவின்நேரடிகண்காணிப்பின் கீழ் பொலிஸ்மா அதிபர் அலுவலக பிரதானி பிரதி பொலிஸ்மா அதிபர் ரன்மல் கொடிதுவக்குவின் மேற்பார்வையில் பொலிஸ் தலைமையகத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.


சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் உத்தரவிற்கு அமைவாக இக்குழு பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான பாணந்துறை பழைய பசார் வீதியிலுள்ள பள்ளிவாசல், வெல்லம்பிட்டி கொஹிலவத்த ஜும்மா பள்ளிவாசல் ஆகியவை தொடர்பில் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இன, மத நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் திட்டமிட்ட குழுவொன்று இவ்வாறான நடவடிக்கைகளின் பின்னணியிலிருந்து செயற்படுவது ஆரம்பகட்ட விசாரணைகளில் உறுதியாகியுள்ள நிலையில் அவர்களை கைது செய்து கடும் சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

அதன்படியே பொலிஸ் தலைமையகத்தின் சிறப்பு பொலிஸ் பிரிவொன்று சம்பவம் இடம்பெற்ற பகுதி களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் நேற்று முன்தினம் முதல் அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்த நிலையில் மறுநாள் நள்ளிரவு ஒரு மணிக்கு வெல்லம்பிட்டி பள்ளிவாசல் மீது கல்வீச்சு தாக்குதலும் பாணந்துறை பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காலியில் இடம்பெற்ற பயங்கர விபத்தில் 31 பெண்கள் உட்பட 44 பேர் காயம்



(கொழும்பு)

காலி - அக்குரஸ்ஸை பிரதான வீதியின் கியன்துவ பிரதேசத்தில் இடம்பெற்ற பயங்கர விபத்தில் 44 பேர் காய மடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. தனியார் பேருந்து ஒன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றும் மோதிக் கொண்டதில் இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அக்குரஸ்ஸையிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற இ.போ.ச. பேருந்தும் எதிர் திசையில் வந்த தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் இவ்வித்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 31 பெண்கள் உள்ளடங்குவதாக கூறப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் ஆறுபேர் மேலதிக சிகிச்சைக் காக மாத்தறை பொது வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# பிலியந்தலை துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த சிறுமி மரணம்

(கொழும்பு)

பிலியந்தலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிக்கி காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிலியந்தலை பகுதியில் போதைப் பொருள் சுற்றிவளைப் பொன்றுக்குச் சென்ற பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் சிறப்பு விசாரணையாளர் பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் மீது முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

அத்துடன் சிறப்பு விசாரணை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ உள்ளிட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் சிறுவர்கள் இருவர் உள்ளிட்ட மூன்று சிவிலியன்களும் காயமடைந்துகளுபோவில-கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் பிலியந்தலை மக்கள் வங்கிக்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

இதன் போது பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிளான (4946) அபே விக்ரம உயிரிழந்தார் எனவும் பொலிஸ் பரிசோதகர் ரங்க ஜீவவுடன் பொலிஸ்கான்ஸ்டபிள்(67055) சமிந்த காயமடைந் ததாகவும் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்திருந்தார்.

இதனைவிட காயமடைந்தவர்களில் 11 வயதான சிறுமி ஒருத்தியும் 15 வயதான சிறுவன் ஒருவனும் மற்றொரு சிவிலியனும் களுபோவில வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ள நிலையில் 11 வயது சிறுமியின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக களுபோவில வைத்திய சாலையின் பேச்சாளர் தெரிவித்திருந்த நிலையில் குறித்த சிறுமி சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சைட்டம் வேண்டுமா? மாணவர்கள் வேண்டுமா?

## அரசிடம் ஜே.வி.பி. கேள்வி


(கொழும்பு)

சைட்டம் வேண்டுமா அல்லது மாணவர்கள் வேண்டுமா என்பதை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும்.

சைட்டத்தை தெரிவு செய்து கொண்டு நடைமுறையை தீர்மானிக்க வேண்டும்.

அல்லது மாணவர்களின் பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு சைட்டத்தை கைவிட வேண்டும். மாணவர்களைக் கட்டுப்படுத்த ஆயுதத்தை கையில் எடுத்தால் அதுவே அரசாங்கத்தின் இறுதியாக அமையும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

கொழும்பில் நேற்று நடந்த மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். (இ-7)



# இன்று ஒரு தகவல்

## 'அதனாலென்ன பரவாயில்லை' எனும் மனநிலை

வாழ்க்கைப் பாதையில் எத்தனையோ கரடுமுரடான பகுதிகள்; எத்தனையோ இடி மின்னல்கள்; கணக்கு வழக்கில்லாமல் தடைக்கற்கள்; பிரச்சினைக் குன்றுகள்!

இவற்றையெல்லாம் கடந்து செல்ல நமக்கு நல்லதொரு மனநிலை தேவை. இல்லாவிடில் ஒவ்வொன்றும் பெரிய பிரச்சினை தான்; எல்லாமே மலைப்பான விடயம்தான்.

இது இப்படி இருக்க சிறுசிறு பிரச்சினையெல்லாம் பெரிதுபடுத்திக்கொண்டு அங்கங்கே சோர்ந்து உட்கார்ந்து விடுகிறார்கள் பலர்.

என்னது எக்ஸ்பிரஸ் இல்லியா? அதைத் தவிர வேறு எந்தப் பத்திரிகையும் நான் படிக்க மாட்டேன்னு தெரியுமில்ல என்றும் பஸ்ஸில் கடைசி சீட்ல எவன்யா பயணம் பண்ணுவான்.? கேன்சல் பண்ணு டிக்கெட்டை என்றும் சிறுசிறு விடயங்களில் கூட மூட்அவுட் ஆகி உட்கார்ந்து விடுகிறார்கள் பலர்.

இதெல்லாம் நடைமுறைக்குச் சரிப்பட்டு வராத வாழ்க்கை. இவர்கள் மூட் அவுட் ஆனாலும் பரவாயில்லை. தங்கள் பிரச்சினையைப் பலருக்கும் பரப்பி மற்றவர்களின் மனநிலையையும் கெடுத்து வைப்பார்கள். குறிப்பாக இவர்களிடம் செல்வமும் செல்வாக்கும் இருந்துவிட்டால் போதும். இவர்கள் ஆடும் ஆட்டம் சகிக்க முடியாது.

சிறுசிறு பிரச்சினைகளுக்கெல்லாம் சோர்ந்துபோய்க் கவலைத்திண்ணைகளைத் தேடித்தேடிப் போய்ப்படுத்துக் கொள்கிறவர்களுக்கு வாழ்க்கை இனிக்க வாய்ப்பில்லை.

நம்மைப் பெரிதாகப் பாதிக்கக்கூடிய விடயங்களைத் தவிர மற்றவற்றிலெல்லாம் அதனாலென்ன பரவாயில்லை எனும் மனநிலை நமக்கு அவசியம்.

முடிந்தவரை பிரச்சினைகளையும் தடங்கல்களையும் இயலாமைகளையும் எளிதாக எடுத்துக்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். இதை எக்ஸ்பிரஸ் பேப்பரிலும் பஸ்ஸிலும் தான் ஆரம்பித்துப் பழகிக் கொள்ள வேண்டும்.

எல்லாமே நம் எண்ணப்படி நடக்கப் போவதில்லை என்பதைத்திரும்பத்திரும்ப அனுபவப்பட்டும்குறிப்பிட்ட விடயங்களையே பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்தால் அதைவிட மூடத்தனம் வேறு இருக்க முடியாது.

கவரிமானைப் போலவும் தொட்டால் சிணுங்கி போலவும் ஏதும் பட்டால் சுருங்கி முடங்கிக்கொள்ளும் மரவட்டை போலவும் வாழ்ந்தால் வாழ்க்கையின் ஒவ்வொரு கணப்பொழுதும் யுகம்யுகமாய்தான் நகரும்.

அங்கங்கே நம்மீது வீசப்படும் பிரச்சினை மூட்டைகளைப் பிரித்தெடுத்து தீர்வு கண்டு வீசி எறிவதை விட்டு விட்டு ஒவ்வொன்றையும் தலைமேல் சுமந்தபடி நடக்க எண்ணுவதை எவரும் புத்திசாலித்தனம் என்று போற்றமாட்டார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# மற்றுமொரு சிக்கலில் கோத்தபாய

கொழும்பு உட்பட பல பிரதேசங்களில் நேற்று முன் தினம் பெய்த அடைமழை காரணமாக பாரியளவில் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன.

அதற்கு முன்னர் வெள்ள வத்தை சவோய் திரையரங் கிற்கு பின்னால் ஈ.ஏ.பி. நிறு வனத்தினால் புதிதாக நிர் மாணிக்கப்பட்டுள்ள கட்டடம் உடைந்து விழுந்தது.

இந்த அனர்த்தம் காரண மாக 27 பேர் காயமடைந் துள்ளதுடன் ஒருவர் உயிரி ழந்துள்ளார். இடிபாடுகளில் சிக்குண்டவர்களை மீட்கும் பணியில் முப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

வெள்ளவத்தை ஏரியை இணைந்து இந்த கட்டம் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையில், அது தரமற்ற வகையில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. ஏரியில் இருந்து ஒதுக்க வேண்டிய நியம தூரம் ஒதுக்கப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த கட்டடத்திற்கு அப்போதைய நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாளராக செயற்பட்ட கோத்தபாய ராஜ பக்ஷவினால் இரகசியமான முறையில் அனுமதி வழங் கப்பட்டுள்ளதாக தெரியவந் துள்ளது.

இதேவேளை, கோத்த பாய ராஜபக்ஷவினால் புழுது பார்க்கப்பட்ட ரேஸ் கோஸ் கட்டட தொகுதிகளின் கூரை கள் காற்றில் பறந்துள்ளன. அதுவும் தரமற்ற நிலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

கடந்த ஆட்சியின் போது பெருமளவு தரகு பணத்தை பெற்றுக்கொண்டு முறையற்ற வர்த்தகங்களுக்கு கோத்த பாய அனுமதி வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொலிஸ் அதிகாரியை அச்சுறுத்திய சீனப் பிரஜைக்கு சிறைத் தண்டனை

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத் தரை அச்சுறுத்திய சீனப் பிரஜை ஒருவருக்கு அபரா தம் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீத வான் மற்றும் மாவட்ட மேல திக நீதவான் லங்கா ஜய ரட்ன நேற்று முன்தினம் இந்த அபராதத்தை விதித் துள்ளார்.

கடவுச்சீட்டை பரிசோத னைக்கு வழங்க மறுத்து பொலிஸ் உத்தியோகத்தரை அச்சுறுத்தியதாக சீனப் பிரஜை மீது குற்றம் சுமத் தப்பட்டு வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரியை அச்சு றுத்திய சீனப் பிரஜைக்கு ஒத்தி வைக்கப்பட்ட மூன்று மாத கால சிறைத்தண் டனை விதிக்கப்பட்டதுடன், ஆயிரத்து 500 ரூபா அப ராதமும் விதிக்கப்பட்டுள் ளது.

சீனப் பிரஜையான பியன்கீ சூன்கூ என்பவருக்கே இவ் வாறு தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

கடவுச்சீட்டை பரிசோத னையிட அனுமதியளிக்காது பொலிஸ் உத்தியோகத்தரை அச்சுறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு சீனப் பிரஜை கைது செய்யப்பட்டார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோ கத்தர் ஒருவர் சீனப் பிர ஜையை கைது செய்து நீதி மன்றில் முன்னிலைப்படுத்தி யுள்ளார்.

மேலும், கடமையில் ஈடு பட்டுள்ள பொலிஸ் உத்தி யோகத்தருக்கு கடவுச்சீட்டை வழங்காது அச்சுறுத்தியமை கடுமையான குற்றம் என நீதிமன்றம் சீனப்பிரஜைக்கு எச்சரிக்கை விடுத்துள் ளது. (இ-7)

# பற்பசை பக்கற்றுக்குள் அடைத்து வைத்து கைதிக்கு ஹெரோயின்; இளைஞன் கைது

திருகோணமலை சிறைச் சாலைக்குள் நூதனமான முறையில் ஹெரோயின் கடத்த முற்பட்ட 20 வயது இளைஞர் ஒருவர் துறைமுக பொலிஸா ரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை சிறைச் சாலையில் இருக்கும் கை திக்கு, பற்பசை பக்கற்றுக்குள் அடைக்கப்பட்ட 100 மில்லி கிராம் ஹெரோயினை உண வுப் பொதியினுள் அடைத்து வழங்க முற்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் தமக் கும் இக்கடத்தலுக்கும் எவ் வித தொடர்பும் இல்லை எனவும் தனக்கு அறிமுக மான ஒருவரே பொதி ஒன் றைக் கொடுத்து அனுப்பிய தாகவும் வாக்குமூலத்தில் கைது செய்யப்பட்ட இளை ஞர் கூறியுள்ளார்.

இதனையடுத்து உப்பு வெளியில் வசிக்கும் இக்கடத் தலுடன் தொடர்புடைய பிர தான சூத்திரதாரியை கைது செய்யும் நடவடிக்கையில் துறைமுக பொலிஸார் ஈடு பட்டுள்ளனர். (இ-7)

# மைத்திரி அரசில் மகிந்தவின் ஒற்றன்

(கொழும்பு)

நீண்ட நாட்களாக இழுத் தடிக்கப்பட்டு வரும் அமைச் சரவை மாற்றத்திற்கு ஜனா திபதி மைத்திரிபால சிறி சேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகி வருவதாக அந்தக் கட்சியின் உட்தரப்புத் தக வல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் விளை யாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, மின் வலுத்துறை அமைச்சர் ரஞ் சித் சியம்பலாபிட்டிய, கனிய எண்ணெய்வளத்துறை அமைச் சர் சந்திம வீரக்கொடி, நீர்ப் பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோருக்கு பதவிகள் கிடைக்காமல் போகலாம் எனக் கூறப்படுகிறது.

இந்த அமைச்சர்களில் ஒருவர் அமைச்சரவையில் இருந்து கொண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கு அரசாங்கத்தின் சகல தகவல்களையும் வழங்கி வருவதாக அரச புலனாய்வுத் துறையும் உறுதிப்படுத்தி யுள்ளது.

இந்த அமைச்சர் தொடர் பாக ஜனாதிபதி கடும் வெறுப் பிலும் கோபத்திலும் இருப்ப தாக சுதந்திரக் கட்சியின் தகவல்கள் கூறுகின்றன.

தமது பதவிகளில் திறம் பட செயற்பட முடியாத கார ணத்தினால் ஏனைய அமைச் சர்கள் பதவிகளை இழக்க உள்ளதாக பேசப்படுகிறது.

இவர்களுக்கு பதிலாக எஸ்.பி.திஸாநாயக்க, சரத் அமுனுகம, டிலான் பெரேரா, திலங்க சுமதிபால ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சியினர் வகித்து வரும் பதவிகளில் எந்த மாற் றங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என அந்தக் கட்சி யின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் மீது பிரதமர் கொண்டுள்ள நம்பிக்கை, கடந்த இரண்டு ஆண்டுக ளில் அவர்கள் எடுத்துள்ள முன்னேற்றகரமான நடவ டிக்கைகள் தொடர்பில் பிரத மர் திருப்தியடைந்துள்ள தால், பதவிகளில் மாற்றங் கள் ஏற்படாது எனவும் அந்த சிரேஷ்ட உறுப்பினர் குறிப் பிட்டுள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் உடன்படிக்கைக்கு அமைய ஐக்கிய தேசியக் கட்சி வகிக் கும் அமைச்சுகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கும் அமைச்சுக்கள் தொடர்பில் சுதந்திரக் கட்சி யும் தீர்மானங்களை எடுக்க இடமளிக்கப்பட வேண்டும் என பிரதமர், ஜனாதிபதி யிடம் திட்டவட்டமாக கூறி யுள்ளதாக இதற்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந் தன.

இந்த நிலையில், ஜனா திபதி மைத்திரிபால சிறி சேன எதிர்வரும் 23 ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்டுச் செல்லவுள்ள துடன், பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க எதிர்வரும் 28 ஆம் திகதி அமெரிக்கா புறப் பட்டுச் செல்லவுள்ளார். (இ-7)

# ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு தமிழினம் அழிக்கப்பட்ட நாளே மே 18




எமது நாட்டிலே ஜனநா யக உரிமைகள் மறுக்கப் பட்டு எமது தமிழ் இனம் அழிக்கப்பட்ட நாளாகவே முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நாளான மே 18 ஐ பார்க்க வேண்டி இருக்கின்றது என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவராசா கலை யரசன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூறும் நிகழ்வு நேற்று முன் தினம் காரைதீவு கடற்கரை காளிகோயில் அருகாமை யில் முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் உறுப் பினர் பாஸ்கரன் தலைமை யில் நடைபெற்றது.

இந்த நிகழ்வினை காரைதீவு தமிழரசுக் கட்சி யின் பற்றாளர்களும் அம் பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களும் இணைந்து நடத்தியிருந்தனர்.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே கிழக்கு மாகாண சபை உறுப் பினர் தவராசா கலையரசன் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் இனத்திற்கு தொன்மை மிக்க பல வர லாறுகள் உண்டு. கல்வியி லும் சரி, ஆயுத ரீதியான போராட்டங்களிலும் சரி பல சாதனைகளை படைத்த ஒரு மகத்தான இனம்தான் தமிழ் இனம். அப்படிப்பட்ட வலு வான இனத்தின் உயிர் களை இந்த நாட்டை ஆண்ட அரசுகள் திட்டமிட்டு 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க் காலிலே கொன்று குவித்தது.

இந்த நாட்டிலே தமிழ னாக பிறந்த ஒரே காரணத் தினால்தான் சிறியவர்கள் முதல் முதியவர்கள் வரை கொல்லப்பட்டிருக்கின்றார் கள். இதுதான் தமிழ் இனத் தின் நிலைமை.

இன்று உலக நாடுகள் அனைத்திலும் பல இனமக் கள் சிறுசிறு குழுக்களாக தீவுகளிலே வாழ்கின்றார் கள். இவர்கள் அனைவருக் கும் சர்வதேச சட்டங்கள், நிபந்தனைகள் எல்லாம் அவர்களது உயிரைப் பாது காப்பதற்காக பயன்படுத்தப் படுகின்றன.

ஆனால் எமது நாட்டிலே அந்த ஜனநாயக உரிமை மறுக்கப்பட்ட எமது தமிழ் இனம் அழிக்கப்பட்ட நாளா கவே மே 18 ஐ பார்க்க வேண்டி இருக்கின்றது.

அது மாத்திரம் அல்ல, இந்த நாட்டிலே தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டோர், கடத்தப்பட்டோர் என்ற அடிப் படையிலும் இன்றும் மக்கள் வீதிகளில் கணவனை, சகோ தரிகளை, பிள்ளைகளை, உறவுகளை பறிகொடுத் தவர்களாக அதற்கான தீர் வினை வேண்டி போராட் டங்களை நடத்தி வருகின் றார்கள்.

ஆனால் இந்த அரசு அதனை விடுத்து பாராமுக மாகவே இருந்து வருகின் றது. 1945 ஆம் ஆண்டு எழுதப்பட்ட கட்டுரையில் 28 வீதமான தமிழர்கள் இங்கு வாழ்ந் திருக்கின்றார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் இன்று தமிழர்க ளின் நிலைமை எவ்வாறு இருக்கின்றது என்பதை நாங்கள் ஒவ்வொரு வரும் சிந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களுடைய பிரச் சினைக்கான தீர்வினை பெற வேண்டும் என்பதற்காக எமது தலைமைகள் அல்லும் பகலும் உழைத்து கொண்டு வருகின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம், காணி விடுவிப்பு தொடர்பான போராட்டம் என இரண்டு துருவங்களில் போராட்டங் கள் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றன.

இனிமேல் இந்த நாட் டிலே எந்த அரசாங்கம் ஆட் சிக்கு வந்தாலும் எந்த படு கொலைகளும் நிகழாத வண்ணம் தங்களுடைய அரசியலை முன்னெடுக்க வேண்டும். தமிழர்களாகிய நாங்கள் இந்த நாட்டிலே பல உயிர்களை, பல இடங்களை இழந்து இன்றும் அதனை பெறுவதற்கான போராட்டங் களில் ஈடுபட்டு வருகின் றோம்.

இனிமேல் இழப்பதற்கு எங்களிடம் எதுவுமே இல்லை. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மாத் திரம் இல்லை இலங்கையில் பல இடங்களில் தமிழர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் அதற்கான சான்றுகள் இருக் கின்றன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட புனர்வாழ்வு அளிக்கப்பட்ட உறவுகளுக்குக் கூட எந்தவித மான வாழ்வாதார திட்டங் கள், அவர்களது எதிர்கால திட்டங்கள் எதுவுமே இது வரை இந்த அரசினால் முன் னெடுக்கப்படாத நிலைமை தான் இருந்து கொண்டிருக் கின்றது.

இந்த நிலைமை மாற்ற மடைய வேண்டும். இதற் காக ஒவ்வொரு பிரதேசத் திலும் இருக்கின்ற தலைவர் கள் ஒற்றுமையாக இருந்து செயற்பட வேண்டும் என கலையரசன் இதன்போது சுட்டிக்காட்டினார். (இ-7)

# அமைச்சர்களுக்காக இறக்குமதி செய்யப்படும் ஒரு வாகனத்திற்கு ரூ.75 இலட்சமே செலவு

## அமைச்சர் தயா கமகே கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக் காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களில் ஒரு வாக னத்திற்கு 75 இலட்சம் ரூபா மாத்திரமே செலவாகும் என ஆரம்ப கைத்தொழில் அமைச் சர் தயா கமகே தெரிவித் துள்ளார்.

எனினும் ஒரு வாக னத்தை இறக்குமதி செய்ய 4 கோடியே 50 இலட்சம் ரூபா செலவாகின்றது என்ற பொய் யான கருத்து சமூகமயப் படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள் ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இந்த வாகனங்களுக் காக வரியாக அறவிடப்படும் 3 கோடியே 75 இலட்சம் ரூபா திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படும்.



கடந்த அரசாங்கத்தின் காலத்தில் போன்று வாக னங்களை இறக்குமதி செய்ய அரச பணத்தில் மேலதிக தொகை செலவு செய்யப் படுவதில்லை எனவும் தெரிவித்தார். (இ-7)

# மீதொட்டமுல்ல சம்பவம்; தகவல்களை வழங்குமாறு ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி ஆராய்வதற்கென ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இந்தத் தனிநபர் ஆணைக்குழுவை நியமித்துள்ளார். இந்த ஆணைக்குழுவிற்று முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கலாநிதி சந்திரதாஸ நாணயக்கார தலைமை தாங்குகிறார்.

குறித்த சம்பவம் பற்றி விரிவான முறையில் ஆராய்ந்து அறிக்கையை சமர்பபிப்பது இந்தக் குழுவின் பொறுப்பாகும்.

மீதொட்டமுல்ல விபத்து பற்றி எழுத்து மூலம் தகவல்களையோ, முறைப்பாடுகளையோ சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் தனிநபர்களையும், சிவில் அமைப்புக்களையும் கேட்டுள்ளார்.

மூன்று மொழிகளிலும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள ஆணைக் குழுவுக்கு இந்தத் தகவல்களையும், முறைப்பாடுகளையும் அனுப்பி வைக்க முடியும். அடுத்த மாதம் 27ம் திகதிக்கு முன்னர் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஆந்திராவில் சாரதி இல்லாத பேருந்தை இயக்கத் திட்டம்

## முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு நடவடிக்கை

முதல் கட்டமாக அமராவதி முதல் தலைமை செயலகம் வரை சாரதி இல்லாத இலத்திரனியல் பேருந்துகள் விரைவில் இயக்கப்படும் என்று முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

ஆந்திரா மாநிலம் வெல்கம் டிடியில் உள்ள தற்காலிக தலைமை செயலகத்தில் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு நகர வளர்ச்சித் துறை அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

ஆந்திராவில் 160 ஏக்கரில் தலைமை செயலகமும், சட்டப் பேரவை கூடமும் அமைக்கப்படுகிறது. இதில் 20 ஏக்கரில் கட்டடங்களும், மீதமுள்ள 140 ஏக்கரில் புளு அன்ட்கிரீன் அடிப்படையில் தண்ணீர், செடிகள் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமராவதி தலைநகருக்காக சிங்கப்பூர் அரசுடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதற்கான இறுதி வடிவமைப்பை எதிர்வரும் 22ஆம் திகதி சமர்ப்பிக்க உள்ளனர். இதுவரை 90 சதவீத டிசைனிங் பணிகள் முடிந்துள்ளன.

அமராவதி தலைநகர் நமது சம்பிரதாயம், கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்படும். சர்வதேச அளவில் புதிய தொழில் நுடபத்துடன் போக்குவரத்து சேவையும் அங்கு அமைக்கப்படுகிறது.

முதல் கட்டமாக அமராவதி முதல் தலைமை செயலகம் வரை சாரதி இல்லாத இலத்திரனியல் பேருந்துகள் விரைவில் இயக்கப்படும்.

மேலும் பேருந்து, புகையிரதம் என்று ஒரே பற்றுச் சீட்டில் பெற்றுக் கொண்டு எந்த மார்க்கத்திலும் ப்யணம் செய்யும் வகையில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

ஒரு நகரத்துக்கு மேம்பாலங்கள் மிக முக்கியமானது. எனவே இங்கு உலகத் தரத்தில் மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

இந்த மேம்பாலங்கள் கலாச்சாரம் நிறைந்திருக்கும் வகையில் கட்டப்படும். மேலும் சோலார் மின்சாரத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப் படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீர்ப்பாசனத்துறையில் அரசாங்கம் பாரிய புரட்சி

(கொழும்பு)

பாரியளவிலான குளங்களை அமைத்த மன்னர்களின் ஆட்சியின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ப்ரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான அரசாங்கம் நீர்ப்பாசனத் துறையில் பாரிய புரட்சியை மேற்கொள்வதாக நீர்ப்பாசன மற்றும் நீர்வளமுகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசன அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அமைச்சர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

ஐந்து குளங்களை மறுசீரமைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிறியளவிலான 100 குளங்களை புனரமைத்துள்ளதோடு, அணைகளை உறுதிப்படுத்தி, குளங்களின் கொள்ளளவை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தையும் அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கலாசாலை வீதி திருநெல்வேலி ஸ்ரீ காளி காம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 16 தின ங்கள் இடம் பெறவுள்ளது. தினமும் மாலை 4.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகும். 05.06.2017 திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. (இ-3)

• • • • • •

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை 1ஆம் வட்டாரம் ஸ்ரீ ஆதி வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. 07.06.2017 அன்று காலை 8 மணிக்கு 108 சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது. (இ-3)

# பெரிய வெங்காயத்தால் பி.பீ.ஜயசுந்தரவுக்கு சிக்கல்

நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகியுள்ளார்.

பி.பீ.ஜயசுந்தர நிதியமைச்சின் செலாளராக பணியாற்றிய போது, லங்கா சதொச நிறுவனத்திற்காக பெரிய வெங்காயம் கொள்வனவு செய்ததில் மோசடி இடம் பெற்றதாகவும் இதன் காரணமாகவே, வாக்கு மூலம் ஒன்றை வழங்குவதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகியுள்ளார்.

இந்த மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு 135.8 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1078

Search for people, places and things    Nagendram    Home

### சதீஸ்



ஒருவர் போதையில் தள்ளாடியபடி கரன்ட் கம்பத்து அடியில நின்னுகிட்டு கம்பத்தை தட்டி ஏய்...கதவை திறடி...உன் புருஷன் வந்திருக்கேன்! பக்கத்தில படுத்திருந்த மற்றொரு குடிகாரன், ஏம்பா வீட்டில யாரும் இல்லைப்போல இருக்கு...!இவன், இல்ல பிரதர்... வீட்டிலதான் இருக்கா... மாடில லைட் எரியுது பாருங்க!

### குலம்

டேய் ஏதோ வைரஸ் வருதாம்டா, போன ஜாக்கிரதையா வைச்சுக்கோ



நம்ம ஊர்ல அடிக்கிற வெயிலுக்கு அதெல்லாம் வராதுண்ணே...எவ்ளோ பெரிய வைரஸ் கிருமியா இருந்தாலும் செத்துடும்ணே...

### நிதுர்சா

மொளகாபொடி மொளகால இருந்து வருது...
மஞ்சள்பொடி மஞ்சல்ல இருந்து வருது...



அப்ப இந்த பல்பொடி பல்லுல இருந்துதான வரணும்..

### விஜிதா

முருகேசு உயரமான மரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்தார். அவரை வீட்டிற்குத் தூக்கிச் சென்றனர்.

/siringa.pls


அங்கு வந்த டாக்டர் அவரைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு, "முருகேசு இறந்து விட்டார்" என்றார்.

ஆனால் அடிபட்ட முருகேசோ... தன் கண்ணை விழித்துப் பார்த்து "நான் இறக்கவில்லை டாக்டர், உயிரோடு தான் இருக்கிறேன்" என்றார்.

அங்கிருந்த முருகேசு மனைவி, "வாயை மூடுங்கள், டாக்டருக்குத் தெரியாதது உங்களுக்கு என்ன தெரியும்?" என்று அதட்டினாள்.

### கனி

கட்டின புடைவையோ உன்னை வரச் சொன்னா இது என்னா சூட்கேஸ் நிறைய புடைவைங்களா இருக்கு...



இதெல்லாம் ஏற்கனவே "கட்டின புடைவை"ங்தான் டார்லிங்...!

### சுபாங்கி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## பல்கலை.மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தி

# அடக்குமுறை மனோபாவத்தை அரசாங்கம் வெளிப்படுத்தியது

### மொஹமட் முஸம்மில் குற்றச்சாட்டு



பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதல் மிலேச்சத்தனமானது. இதனால் அரசாங்கத்தின் அடக்குமுறை நிறைந்த மனோபாவமே வெளிப்படுகின்றதென தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் குற்றம் சாட்டியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் ஒன்றுதிரண்டு சைட்டம் தனியார் கல்லூரிக்கு எதிர்ப்பு வெளியிட்ட பல்கலைக்கழக சமூகத்தின் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட கண்ணீர்ப் புகைக் குண்டு தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இதனால் அரசாங்கத்தின் எண்ணப்பாடுதான் வெளியாகின்றது. அரசாங்கத்தை எதிர்த்தால் ஜனநாயகத்தை சிறிதும் மதிக்காமல் அடித்து கலைப்போம் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

அதனால் அரசாங்கம் செய்தது பெரும் தவறு. இவ்வாறு அரசாங்கத்திற்கு எதிரானவர்களை தாக்கி முடக்கி விட்டு அரசர்ங்கம் நீண்ட தூரம் பயணிக்க எதிர்பார்க்குமாயின் அந்த எதிர்பார்ப்பு மாயமாகிப் போய்விடும்.

மாணவர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தடிகளாலும், கண்ணீர் புகைக் குண்டுகளினாலும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினராலும் முடியாதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சிரியாவில் அரசு ஆதரவு பகுதிகளில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் தாக்குதல்

# 50 பேர் உயிரிழப்பு

(பெய்ரூட்)

சிரியாவின் ஹமா மாகாணத்தில் அரசு கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு கிராமங்களில் ஐ.எஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது தீவிரவாதிகள் நடத்திய ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான அரசுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகிறது. அரசுப் படைகளுக்கு ஆதரவாக ரஷ்ய விமானப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அதேபோல், அரசு கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை குறி வைத்து ஐ.எஸ். தீவிரவாதிகளும் அவ்வவ்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சிரியாவின் ஹமா மாகாணத்தில் அரசு கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு கிராமங்களில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதலில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக பிரிடடனை மையமாக கொண்டு செயற்படும் சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் தரப்பில், இரண்டு கிராமங்களிலும் 15 அப்பாவி பொதுமக்கள் மற்றும் 27 அரசு ஆதரவு படை வீரர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 10 பேர் யார் என்பது அடையாளம் கண்டு பிடிக்கப்படாமல் உள்ளது.

இந்த தாக்குதலில் ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த 10 பேரும் உயிரிழந்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

## சகல மாகாண சபைகளுக்கும்

# ஒரே நாளில் தேர்தல் 2019 இல் தீர்மானம்

நாட்டிலுள்ள சகல மாகாணங்களுக்குமான ஆட்சிக் காலத்தை 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரையில் நீடித்து, ஒரே தினத்தில் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வட மத்திய மாகாணத்தின் புதிய அமைச்சர் சுசில் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்காக வேண்டி, அரசியலமைப்பின் 17 ஆவது சரத்தை திருத்தம் செய்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வட மத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களின் உத்தியோக பூர்வ ஆட்சிக் காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதமும், மத்திய, வடக்கு, வடமேல் மாகாணங்களின் உத்தியோகபூர்வ ஆட்சிக் காலம் அடுத்த வருடம் செப்டெம்பர் மாதத்திலும், மேல் மற்றும் தென் மாகாணங்களுக்கான உத்தியோகபூர்வ தேர்தல் நடத்தப்பட வேண்டிய காலம் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதமும், ஊவா மாகாணத்துக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டிய கால எல்லை 2019 செப்டெம்பர் மாதமும் ஆகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## வெள்ளவத்தையில் கட்டட அனர்த்தம்; விசேட விசாரணைக்கு சஜித் பணிப்பு

கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் 5 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த விபத்து தொடர்பான விசாரணைகள் நேற்று ஆரம்பிக்கப் ட்டுள்ளன.

வெள்ளவத்தை சவோஸ் திரையரங்குக்கு பின்புறமாக அமைந்துள்ள தி என் சலன்ஸ் என்ற 5 மாடிக் கட்டடம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடிந்து விழுந்தது.

இவ்விபத்தில் 27 பேர் காயமடைந்த நிலையில் அவர்களில் 14 பேர் களுபோவில வைத்தியசாலையிலும், ஏனைய 9 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த அனர்த்தம் தொடர்பான விசாரணைகள் குறித்து வீடமைப்புத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம் வினவியபோது, அந்நேரத்திலேயே அமைச்சர், வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் ஹேமந்த பாலச் சந்திரவுடன் தொடர்பு கொண்டு விசாரணை முன்னெடுக்குமாறு பணித்தார்.

இந்த நிலையில் நேற்று விசேட விசாரணைக் குழுவொன்று விபத்து இடம்பெற்ற பகுதிக்கு விஜயம் செய்ததாகவும், விசேட விசாரணை ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளதாகவும் வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்தார். (இ-7)

## பிக்கு மாணவன் உட்பட எட்டு மாணவர்கள் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக செயற்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட பிக்கு மாணவன் உட்பட எட்டு மாணவர்களையும் பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணியின் போது சட்ட விரோதமாக செயற்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் பிக்கு மாணவன் ஒருவர் உட்பட எட்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த எட்டுப் பேரையும் நேற்று நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்திய போதே பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை தடை செய்தல் உள்ளிட்ட 15 கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புப் பேரணியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி 20 பேர் பாதிப்பு

புஸ்ஸல்லாவை - டெல்டா தோட்டம் தெற்கு பிரிவில் தேயிலை பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 20 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்றுக் காலை இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் புஸ்ஸல்லாவை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தற்போது 3 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள நிலையில், ஏனையோர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களில் 6 பேர் பெண்கள் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மலையக தோட்ட தொழிலாளர்கள் குளவிகளால் தாக்கப்படுவதாகவும், இதில் அதிகமாக தேயிலை பறிக்கும் பெண்களே பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்காரணமாக தேயிலை மலைகளில் காணப்படும் குளவிக் கூடுகளை அகற்றுமாறு பாதிக்கப்பட்டுள்ள தோட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

## புதிய நிர்வாகசபைத் தெரிவு

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி ஆலய அன்னதான சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக சுப்பிர மணியம் தில்லைநாதன், உபதலைவராக ஜெகதீஸ்வரன் ஜெகநாதன், செயலாளராக சின்னத்துரை வரதலிங்கம், உப செயலாளராக சுப்பிரமணியம் கேதீஸ்வரன், பொரு ளாளராக தருமலிங்கம் அருணகிரிநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

## பௌத்த துறவிகள் சண்டியர்களாக மாறக் கூடாது

### கல்வி இராஜாங்க அமைச்சர் அறிவுரை



பௌத்த துறவிகள் விகாரைகளில் இருந்து மத போதனைகளைச் செய்ய வேண்டும். அதை விடுத்து சண்டியர்களைப்போல செயற்படக் கூடாது என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கடந்த மகிந்த ராஜபக்ஷ ஆட்சியைப் போன்று, தற்போதைய ஆட்சியலிலும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக செயற்படும் பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அமைச்சர் மனோ கணேசனை அச்சுறுத்தியமையானது, கண்டிக்கத்தக்க விடயம் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

தேரரின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஒருவரின் அமைச்சிற்குள் சென்று அவரை அச்சுறுத்தும் அதிகாரத்தை தேரருக்கு வழங்கியது யார் எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

தற்போது, மீண்டும் ஒரு முஸ்லிம் எதிர்ப்பு இயக்கம் உருவாகியிருக்கின்றது. இதனை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும். கடந்த சில நாட்களாக முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் திட்டமிட்ட அடிப்படையில் சேதமாக்கப்பட்டுள்ளன. இது மீண்டும் மகிந்த ஆட்சியை நினைவுபடுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே அந்த ஆட்சியை மக்கள் இரண்டு முறை ஓரம் கட்டியிருக்கின்றார்கள்.

இந்த அரசாங்கமும் முறையான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் நல்லாட்சி அரசாங்கமும் பல சிக்கல்களை சந்திக்க வேண்டிவரும் எனவும் இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# அமைச்சரவை மறுசீரமைப்பையே சுதந்திரக் கட்சி விரும்புகின்றது

## அமைச்சர் அமரவீர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

காலதாமதமின்றி, அமைச்சரவையில் மறுசீரமைப்பை கொண்டுவருவதற்கான தேவை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர, மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவில்லையென்றால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ளவர்கள், தொடர்ந்தும் நல்லாட்சியில் இருக்க வேண் டுமா என்று கருதவேண்டிய சூழ்நிலை உருவாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

"அமைச்சரவை மறுசீரமைப்பு கட்டாயமானது. அது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்னெடுக்கப்படும்.

இது, கூடிய விரைவில் முன்னெடுக்கப்படவேண்டும் என்றே. சு.க. கோருகின்றது. காரணம், சு.க. அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என்று பலரும் இந்த மாற்றத்தையே விரும்புகின்றனர்" என்று அவர் தெரிவித்தார்.

மேலும், மறுசீரமைப்பின் போது, ஐக்கிய தேசியக்கட்சியினரது அமைச்சரவைப் பதவிகள் அப்படியே இருக்க வேண்டும் என்றும் சு.கவின் அமைச்சரவைப் பதவிகள் மாத்திரமே மாற்றப்படும் என்பதும் தவறான கருத்தாகும் என்றும் அவர் தெரிவித்தார்.



"அவ்வாறான எந்தவொரு ஒப்பந்தமும், சு.க. மற்றும் ஐ.தே.கவுக்கு இடையில் இல்லை. பிரதமருடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னர், இரண்டு கட்சிகளிலுள்ள எந்த ஒரு அமைச்சரையும் நீக்கிவிட்டு, அதற்கு பதிலாக இரண்டு கட்சியிலுள்ள எந்தவொரு அமைச்சரையும் நியமிப்பதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசியலமைப்பின் படி அதிகாரம் உண்டு" என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கை வைக்காதீர்கள் மைத்திரியிடம் ரணில் அவசர கோரிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்ய வேண்டாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில், ஜனாதிபதி மைத்திரி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சுப் பதவிகளில் மட்டுமே மாற்றம் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. அபிவிருத்தியை கொண்டு வர போதியளவு கால அவகாசம் தமது கட்சி அமைச்சர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென கோரியுள்ள பிரதமர் இன்னும் ஆறு மாத காலத்தின் பின்னர் தேவை ஏற்பட்டால் அமைச்சரவையில் மாற்றம் செய்வது குறித்து கவனம் செலுத்த முடியும் என தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை மாற்றம் செய்யப்படும் போது பிரதமரின் ஆலோசனையை கேட்க வேண்டியது 19ம் திருத்தச் சட்டத்தின் ஊடாக கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மைத்திரி- ரணில் வாக்குக் கேட்டால் மக்கள் சாட்டையடி கொடுப்பார்கள்

## ஊழல் எதிர்ப்பு முன்னணி சுட்டிக்காட்டு

ஊழல், மோசடிகள் குறித்து விசாரணை நடத்த ஸ்தாபிக்க போவதாக கூறிய விசேட நீதிமன்றத்தை உடனடியாக ஸ்தாபிக்குமாறு ஊழல் எதிர்ப்பு முன்னணி வலியுறுத்தியுள்ளது.

விசேட நீதிமன்றத்தை ஸ்தாபித்து பெரியளவில் ஊழல், மோசடிகளை செய்தவர்கள், அரச பணத்தை கொள்ளையிட்டவர்களை தண்டிக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தை வலியுறுத்துவதாக முன்னணியின் ஆலோசகர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவிலுள்ள ஊழல் எதிர்ப்பு முன்னணி யின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் முதலில் பாரிய ஊழல், மோசடிகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லெசில் டி சில்வாவை நீக்கியது.


தற்போது அந்த ஆணைக்குழு பெயர்ப்பலகைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஆணைக்குழுவின் பணிப்பாளர் தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க பதவியை இராஜினாமா செய்தார்.

விக்கிரமசிங்க பதவி விலகிய பின்னர், இலஞ்ச ஆணைக்குழு, மகிந்த ராஜபக்ஷ காலத்தில் இருந்து பெயர்ப்பலகை ஆணைக்குழுவாக மாறியது.

பாரிய ஊழல், மோசடிகளை விசாரிக்கும் செயலகத்திற்கு வழங்கும் வசதிகள் குறைக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த தேர்தலில் திருடர்களைப் பிடிக்க அதிகாரத்தைத் தாருங்கள் என்று கோரி மக்களிடம் வாக்குக் கேட்டால், நல்லாட்சி அரசாங்கத்தின் மைத்திரி குழுவிற்கும் ரணில் குழுவிற்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் என மூன்று தரப்பினருக்கும் மக்கள் சாட்டையால் அடிப்பது நிச்சயம் என தென்னக்கோன் மேலும் தெரிவித்தார். (இ-7)




யாழ். தையிட்டி வடக்கு - கிழக்கு மீள்குடியேறிய மக்களுக்கான மின்சார இணைப்பு வேலைகள் தெல்லிப்பழை சாந்தைச் சந்தியிலிருந்து தையிட்டி வடக்கு - கிழக்கு கிராமங்களை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியில் மின்சார சபையால் நடைபெற்று வருகின்றன.

படங்கள் :- சரவணன்

# வெள்ளவத்தையில் இடிந்து விழுந்த கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்டடம் சரிந்த விபத்து பெரும் சர்ச்சையையே ஏற்படுத்தி வருகின்றது.

அந்த வகையில், கட்டடம் சரிந்து விழுந்தது தொடர்பில் பல்வேறு கோணங்களில் பலதரப்பட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு குறித்த கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கவில்லை எனவும் கொழும்பு மாநகர சபையிடம் குறித்த கட்டட நிர்மாணத்தின் தர நிர்ணயம் குறித்து, நிர்மாணிப்பாளர்கள் அங்கீகாரம் வழங்கவில்லை எனவும் பாரிய அபிவிருத்தி மற்றும் நகர திட்டமிடல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதனை தெரிவித்தார். (இ-7)




# திருந்திய எழிலன்



எழிலனின் தந்தை கல் உடைக்கும் தொழிலாளி. வெயிலில் மாதம் முழுவதும் உழைத்தாலும் கூட அவருக்கு மாத வருமானம் மிகவும் குறைவுதான். அந்த வருமானத்திலேயே அவர் குடியிருக்கும் வீட்டுக்கு வாடகையும் கொடுக்க வேண்டும். உணவு மற்றும் இதர செலவுகளையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தான்படும் கஷ்டங்களைத் தன் மகன் படக்கூடாது என்பதற்காக எழிலனை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என எண்ணினார்.

எழிலன் எட்டாம் வகுப்பு படித்து வந்தான். ஏதோ பள்ளிக்குப் போகிறோம் என்ற கடமைக்காக அவன் பள்ளிக்குப் போவானே தவிர, ஒழுங்காகப் படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற அக்கறை அவனுக்குச் சிறிது கூட இல்லை.

பள்ளியில் சிறிதுநேரம் இருப்பான். பிறகு வெளியில் கிளம்பி விடுவான். சில மாணவர்களுடன் சேர்ந்து ஊர்சுற்றியும் அருகில் இருந்த திரையரங்குகளுக்குச் சென்று திரைப்படம் பார்த்தும் வயதான பெரியவர்களைக் கேலியும் கிண்டலும் செய்தும் பொய் பேசியும் வீணாக பொழுதைப் போக்கி வந்தான்.

மேலும் இது குறித்து அவன் ஒரு நாள் கூட கவலைப்பட்டதே இல்லை.

தன் தந்தையிடம் செலவுக்குக் காசு வாங்கிக் கொள்வான். அவர், எழிலன் ஒரே மகன் என்பதாலும் படிக்கும் மாணவர்கள் ஏதாவது வாங்கிச் சாப்பிடுகிறார்கள் என்றும் எண்ணி அவன் கேட்கும் பொழுதெல்லாம் பணம் கொடுத்து வந்தார்.

எழிலன், தன் தந்தையார் கொடுத்த பணத்தை வாங்கிச் சாப்பிடாமல் தீய நண்பர்களுடன் சேர்ந்து சூதாட்டம் ஆடினான்.

மற்றவர்கள் அவன் கெட்டவன் என வெறுத்து ஒதுக்கும்படி அவனுடைய செயல்கள் இருந்தன.

அவனுடைய வகுப்பாசிரியர், அவனுடைய நடவடிக்கைகள் சரியில்லை என்று கண்டித்தார். பிறகு, அவனுடைய அப்பாவிடம் அவனைக் கண்டித்து வளர்க்குமாறும்சொன்னார். ஆனால், இவற்றால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. எழிலனின் தந்தையார் அவனுடைய செயல்களால் பெரிதும் மனம் வருந்தினார்.

ஒருநாள் பொலிஸார் 10 பேரை வீதியில் அடித்து உதைத்தபடி இழுத்துச் சென்று கொண்டிருந்தனர். இதைப் பார்த்த எழிலன் கூடியிருந்தவர்களிடம், "அவர்களை ஏன் பொலிஸார் அடிக்கிறார்கள்? என்று கேட்டான். அவர்கள் சூதாட்டம் ஆடிக்கொண்டிருந்தவர்கள் என்று கூறினர்.

பல நாட்கள் அவர்கள் அகப்படவில்லையென்றும் இன்று வகையாக அகப்பட்டுக் கொண்டார்கள் என்றும் அவர்கள் அவனிடம் மேலும் கூறினர்.

அதைக் கேட்டதும் எழிலனுக்கு உதறல் எடுத்தது.

"மற்றவர்கள் வெறுக்கும்படி நடந்தால் இப்படித் தான் உதைபட வேண்டும் போலிருக்கிறது" என்று எண்ணி அன்றிலிருந்து திருந்தி விட்டான்.

அன்றிலிருந்து தீய நண்பர்களுடன் சேராமல், தந்தையிடம் பணம் வாங்காமல் பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று பாடங்களை நன்றாக படித்து வந்தான். தன் மகன் எழிலன் திருந்தியதைக் கண்ட அவன் தந்தையார் மகிழ்ந்தார்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

05.2017
20

- 526 - சிரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 300, 000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1498 - போர்த்துக்கீச மாலுமி வாஸ்கொட காமா இந்தியாவின் கோழிக்கோடு நகரை அடைந்தார்.
- 1570 - உலகின் முதலாவது நவீன நிலவரையை (atlas) ஆபிரகாம் ஓர்ட்டேலியஸ் வரைந்தார்.
- 1631 - முப்பதாண்டுப் போர்: ஜேர்மனியின் மாக்டெபூர்க் நகரை புனித ரோமப் பேரரசு கைப்பற்றி நகர மக்களின் பெரும்பான்மையோரைப் படுகொலை செய்தனர்.
- 1813 - நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் படைகளுடன் ஜேர்மனியின் சாக்சனி நகரில் நுழைந்து ரஷ்யா, மற்றும் புருசியாப் படைகளுடன் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான்.
- 1869 - யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு
- 1882 -ஜேர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் முத்தரப்புக் கூட்டணியை ஏற்படுத்தின.
- 1891 - தொமஸ் அல்வா எடிசன் தனது முதலாவது உடல் அசைவு ஒளிப்படக்கருவியைக் காட்சிப்படுத்தினார்.
- 1902 - ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து கியூபா விடுதலை பெற்றது. தொமாஸ் எஸ்ட்ராடா பால்மா முதலாவது அரசுத் தலைவரானார்.
- 1965 - எகிப்தில் கெய்ரோ நகரில் பாகிஸ்தான் விமானம் தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தில் 119 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் கனடாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக 60 விழுக்காட்டினர் வாக்களித்தனர்.
- 1983 - எயிட்ஸ் நோயை உண்டாக்கும் கிருமிகளைக் கண்டுபிடித்த செய்திகள் முதற் தடவையாக வெளியிடப்பட்டன.
- 1995 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற இரண்டாவது வாக்கெடுப்பில் கனடாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக பெரும்பான்மையானோர் வாக்களித்தனர்.
- 1999 - புளூடூத் (Bluetooth) வெளியிடப்பட்டது.

### பிறப்புகள்

- 1799 - பல்சாக், பிரான்சிய எழுத்தாளர் (இ. 1850)
- 1825- ஜார்ஜ்பிலிப்சு பாண்டு, அமெரிக்க வானியலாளர் (இ. 1865)
- 1845 - அயோத்தி தாசர், தமிழகத் தமிழறிஞர் (இ. 1914)
- 1894 - சந்திரசேகர சரசுவதி, காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது தலைவர் (இ. 1994)
- 1923 - எம். டி. இராமநாதன், இந்திய கர்நாடக இசைப்பாடகர் (இ. 1984)
- 1938 - காரை சுந்தரம்பிள்ளை, ஈழத்துக் கவிஞர், எழுத்தாளர் (இ.2005)
- 1939 - பாலு மகேந்திரா, இலங்கை-இந்தியத் திரைப்பட இயக்குநர், ஒளிப்பதிவாளர் (இ. 2014)
- 1953 - ராம்லி இப்ராஹிம், மலேசிய பரத நாட்டியக் கலைஞர்

### இறப்புகள்

- 1506 - கொலம்பஸ், அமெரிக்காவைக் கண்டுபிடித்த இத்தாலிய கடல் பயணி (பி. 1451)
- 1766 - மல்கர் ராவ் ஓல்கர், மராட்டியப் பேரரசர் (பி. 1693)
- 1957 - த. பிரகாசம், சென்னை மாகாண முதல்வர் விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (இ. 1872)
- 1959 - சா. தருமாம்பாள், தமிழக அரசியல்வாதி, சமூக செயற்பாட்டாளர் (பி. 1890)
- 1978 - பி. சா. சுப்பிரமணிய சாத்திரி, தமிழக சமஸ்கிருத, தமிழறிஞர், உரையாசிரியர் (பி. 1890)
- 2004 - எம். ஏ. குலசீலநாதன், ஈழத்து கர்நாடக, மெல்லிசைப் பாடகர் (பி. 1940)
- 2005 - செம்பியன் செல்வன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1943)
- 2008 - பால்ராஜ், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி (பி. 1965)

### சிறப்பு நாள்

- நினைவு நாள் (கம்போடியா)
- விடுதலை நாள் (கியூபா, 1902)
- விடுதலை நாள் (கிழக்குத் திமோர், 2002)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 80 | 100 | 120 | 120 | 90 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 85 | 120 | 120 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 150 | 160 | 200 | 200 | 100 |
| தக்காளி | 100 | 100 | 70 | 80 | 100 | 120 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 180 | 200 | 120 | 150 | 200 | 200 | 140 |
| கரட் | 200 | 400 | 150 | 200-320 | 200 | 320 | 220 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 30 | 40 | 50 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 240 | 300 | 180 | 220 | 300 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 95 | 100 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 180 | 120 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 80 | 100 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | - | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 120 | 120 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 200 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 130 | 100 | 100 | 120 | 160 | 160 | 140 |
| கறிமிளகாய் | 160 | 200 | 100 | 140 | 180 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 110 | 120 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 150 | 250 | 140 | 200 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 50 | 60 | 80 | — | 80 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 15 | 30 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 40 | 80 | 60 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 70 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | — | 200 | — | 240 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 100 | 150 | 200 | — | 280 | — |
| முள்ளங்கி | 80 | 100 | 140 | 80 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 60 | — | 100 | 80 | — | — |

அறத்தின் வழி நில்! அஞ்ச வேண்டாம். உன் இலட்சியமெல்லாம் உன் தேசத்தை, உன் கடவுளை, உண்மையைப் பற்றியதாகவே இருக்கட்டும்.

– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு ஓர் அன்பு மடல்

வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் ஐயாவுக்கு அன்பு வணக்கம்.

முள்ளிவாய்க்காலில் நடந்த நினைவேந்தல் நிகழ்வில் தாங்கள் ஆற்றிய உரையினைக் கேட்டோம். காலம் உணர்ந்த உரை அது.

பொதுவில் எதையும் வெளிப்படையாகவும் நீதியாகவும் தாங்கள் எடுத்தியம்புவதால்தான் தங்கள் மீது தமிழ் மக்கள் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டுள்ளனர்.

உள்நோக்கம் எதுவுமின்றி தமிழ் மக்களின் அவலம் கண்டு தாங்க முடியாத உள்ளத்தினராய் தாங்கள் ஆற்றும் உரைகளும் வெளிப்படுத்தும் கருத்துக்களும் மட்டுமே தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தி நிற்கின்றது.

யார் எதைச் சொன்னாலும் கொழும்பு அரசியல் தலைமை மீது தமிழ் மக்கள் மிகுந்த வெறுப்புக் கொண்டுள்ளனர். இதைச் சொல்வதில் எமக்கு எந்தத் திருப்தியும் இல்லை.

ஆகையால் உள்ளதைச் சொல்வது ஊடகத்தின் ஒரு தலையாய கடமை என்றுணர்கின்றோம்.

தமிழ் அரசியல் தலைமை மீது நமக்கு எந்தக் காழ்ப்புணர்வும் கிடையாது. ஆனால் அவர்களின் போக்கு தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இப்படியே நிலைமை போகுமாக இருந்தால் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களைச் சந்திக்க முடியுமா என்ற கேள்வி சுட எழும்.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின் போது அங்கு கூடியிருந்த தாய்மார் தங்கள் காலைப் பிடித்து அழுத காட்சி கண்டோம். இதயம் நெகிழ்ந்து போயிற்று.

ஒருபுறம் எங்கள் அன்னையர்களின் துன்பம். மறுபுறம் தங்கள் மீது எங்கள் தமிழ் மக்கள் கொண்ட நம்பிக்கை.

இந்த நம்பிக்கைக்கூடாக உண்மையையும் நேர்மையையும் விசுவாசத்தையும் எங்கள் மக்கள் எந்தளவு தூரம் மதிக்கின்றனர் என்ற மெய்யுணர்வு.

ஓர் அரசியல் தலைவரின் பெயரைச் சொல்லி அவரை வெளியே போகுமாறு சொல்லுங்கள் என்று அந்தத் தாய்மார் கூறியதன் உள்ளார்ந்தம் சாதாரணமானதன்று.

இலங்கை ஆட்சியாளர்களோடு சேர்ந்து போவதில் எந்தத் தவறும் இல்லை. அரசாங்கத்தோடு சேர்ந்து எங்கள் மக்களுக்கு என்ன செய்தீர்கள் என்ற கேள்வியாகவே அந்தத் தாய்மார்களின் வெறுப்புணர்வை உணர வேண்டும்.

எனவே இந்த இடத்தில் நாம் தங்களுக்குச் சொல்லக்கூடியது தமிழ் மக்கள் உங்களைத் தங்களின் ஆபத்பாந்தவனாகப் பார்க்கின்றனர். உங்கள் வார்த்தைகள் தங்கள் வலிக்கு ஒத்தடம் என்று நம்புகின்றனர்.

எனவே நீங்கள் தமிழ் மக்களின் தனித்துவமான – நம்பிக்கைக்குரிய – அப்பழுக்கற்ற தலைவராக இருக்கிறீர்கள்.

உங்கள் பணி இனிமேல் எவருக்கும் கட்டுப்பட்டதோ மட்டுப்பட்டதோ இல்லை. உங்களை எவராலும் இனிக் கட்டுப்படுத்த முடியாது.

எனவே சில விடயங்களை நீங்கள் முன்னெடுக்க வேண்டும். அரசாங்கத்தோடு; ஜனாதிபதி மைத்திரியோடு; இந்தியாவோடு; உலகநாடுகளோடு தமிழ்த் தலைவனாக நீங்கள் பேச வேண்டும்.

உங்கள் காலைப்பற்றிப் பிடித்து ஐயா! எங்கள் துன்பத்தை தீருங்கள் என்று கேட்கும் எங்கள் தாய்மாரின் அவலத்தை நீக்க வேண்டும்.

இதைச் செய்வது உங்கள் தலையாய கடமை. இதற்காக நீங்கள் எந்த அரசியல் பற்றியும் சிந்திக்க வேண்டியதில்லை என்பதால்,

களத்தில் இறங்கி எங்கள் மக்களின் பிரச்சினைக்கு முடிவு கட்டுங்கள். சர்வதேசத்திடம் முறையிடுங்கள். இதுவே தங்களிடமான எம் கோரிக்கை.

# நாடுகடத்தப்பட்டால் உயிருக்கு ஆபத்தாகும்!

## ரோஹிஞ்சாக்கள் தவிப்பு

(யாழ்ப்பாணம்)

தம்மை மியன்மாருக்கு நாடு கடத்தாமல் ஐக்கிய நாடுகள் சபையிடமோ அல்லது குடியேறிகளுக்கான சர்வதேச அமைப்பிடமோ கையளிக்கும்படி காங்கேசன்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட ரோஹிஞ்சா இனத்தவர்கள் கோரியுள்ளனர்.

இவர்களது கோரிக்கை தொடர்பில் கலந்துரையாட ஐக்கிய நாடுகள் சபையின் குடியேறிகளுக்கான அமைப்புடன் கலந்துரையாடவிருப்பதாக கைது செய்யப்பட்ட ரோஹிஞ்சா இனத்தவர்களுக்காக நீதிமன்றில் வாதிட்டுவரும் வழக்கறிஞர் ஷிராஸ் நூர்தீன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பில் தஞ்சம் கோரியிருந்த ரோஹிஞ்சா இனத்தவர்களில் முப்பது பேர், சட்டவிரோதமாக படகில் அவுஸ்திரேலியா சென்று கொண்டிருக்கையில் காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பெண்கள் ஏழு பேர் மற்றும் 16 சிறார்களும் அடங்குவர்.

இவர்கள் தொடர்பான வழக்கு கடந்த 16ஆம் திகதி யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், இவர்களை நாடுகடத்த நடவடிக்கை எடுக்கும்படி சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்திடம் தெரிவித்தனர்.

எனினும் தடுப்புக்காவலில் இருக்கும் ரோஹிஞ்சா இனத்தவர்கள் மீண்டும் மியன்மாருக்கு நாடு கடத்தப்பட்டால் அவர்களது உயிருக்கு ஆபத்தாக அமையும் என்று அவர்கள் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து இந்த வழக்கை 14 நாட்கள் ஒத்தி வைத்த நீதிபதி, ரோஹிஞ்சா இனத்தவர்களை மிரிஹானவிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்கள தடுப்பு முகாமில் தொடர்ந்தும் காவலில் வைக்க உத்தரவிட்டார். (செ-11)

## வாள்வெட்டு சந்தேகநபர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கரணவாய்)

தென்மராட்சிப் பகுதியில் அண்மைய நாட்களாக இடம்பெற்று வந்த வாள்வெட்டு சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் ஒருவரை அப்பகுதி மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வேம்பிராய், மந்துவில் பகுதிகளில் அண்மையில் வாள்வெட்டு சம்பவங்கள் இடம்பெற்றன.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரால் முச்சக்கரவண்டி ஒன்றில் வாளுடன் பயணித்த சிலர் கைது செய்யப்பட்ட போதும் 23 வயதுடைய பிரதான நபர் தப்பியோடிய நிலையில் அவரை பொதுமக்கள் பிடித்து தம்மிடம் ஒப்படைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** நெடுந்தீவு பிரதேசம், மட்டுவில், சரசாலை, நுணாவில் பருத்தித்துறை வீதி, கொடிகாமம் கச்சாய் வீதி, நெடுந்தீவு தேசிய நீர் வழங்கல் வடிகால் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** மாங்குளம் ஒரு பகுதி, மன்னகுளம், பெரியார்குளம், கனகராயன்குளம் ஒரு பகுதி, IRCON ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரை, இத்திக்கண்டல், நிலாச்சேனை, வேட்டையன் முறிப்பு, மினுக்கன், பாப்பாமோட்டை, பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல், ஆண்டாங்குளம், கண்ணாட்டி, பரப்புக் கடந்தான், மூன்றாம் பிட்டி, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், கணேசபுரம், விடத்தற் தீவு வைத்தியசாலை, தேவன்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)




ஆனந்த பர்வதத்தை ஆதிசேஷன் வலமாகச் சுற்றிப் பற்றிக் கொணடான். வாயுதேவன் வலிமை முழுவதையும் உபயோகித்து மலையை அசைத்துவிட ஆன மட்டும் முயன்றான்.

ஆனந்த பர்வதம் அசையவில்லை. தென்றல் புயலானது. புயல் சூறா வளியானது. ஆர்ப்பரிக்கும் வாயு தேவனின் ஆவேசத்தைத் தாங்க முடியாமல் அவனி மக்கள் அல் லற்பட்டனர்.

மரங்கள் மண்ணில் இருந்து பிடுங்கப்பட்டன. விலங்குகள் வெட்ட ஏவளியில் வீசப்பட்டன. மக்கள் மந்தை மந்தையாய் மாய்ந்தனர்.

இரவு பகலாக இந்த இழிநிலை தொடர்ந்தது. உயிரினங்களில் ஒன்று கூட எஞ்சாது போய்விடுமோ என்ற நிலை.

இந்திரனும் இன்னபிற தேவர்களும் இதயம் கலங்கினர். ஆனந்த பர்வதத்தை அடைந்தனர். அனந்தனிடம் முறையிட்டனர். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**செவ்வாய் தோஷ பரிகாரம் என்பது என்ன?**

ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் இருப்பதாகத் தெரிந்தால் ஜாதகத்தில் செவ்வாய் தோஷத்தின் இடத்தை கண்டறிந்து பரிகாரங்கள் செய்ய வேண்டும்.




இதற்குச் செய்ய வேண்டிய முக்கியமான பரிகாரம் விரதமிருப்பது என்பதாகும்.

மந்திர ஜெபம், ஸ்தோத்ர ஜெபம், ரத்ன தாரணம், தானம், தேவ தாபஜனம் ஆகியவை கிரகதோஷ பரிகாரத்திற்கான பரிகாரங்களாகும். இதில் நட்சத்திரம் பார்த்துத் தேவையானதைத் தேர்வு செய்ய வேண்டும். செவ்வாய் தோஷமுள்ள தம்பதியர்கள் அதிகமான துயரங்களையும சந்திக்க நேரிடும்.

எனவே செவ்வாய் தோஷ பரிகாரத்திற்காக அனுமரை வணங்குதல் நல்லதாகும். (தொடரும்)

## நாய்க்கடியிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள

நாய் உணவு உண்ணும் போதோ உறக்கத்தில் இருக்கும் போதோ குட்டிகளுடன் உள்ள போதோ அதன் அருகில் செல்ல வேண்டாம்.

நாய்களை உள்ளூராட்சி சபைகளில் பதிவு செய்து கொள்வோம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




❖ ஆன்மீக வாழ்க்கையில் நான் இன்பமடையவில்லை என்றால் புலனின்ப வாழ்க்கையில் திருப்தியை நாடவேண்டுமா? எனக்கு அமுதம் கிடைக்கவில்லை என்பதற்காக சாக்கடை நீரைக்குடிக்க வேண்டுமா?

❖ இன்பம் மனிதன் முன் தோன்றும்போது, தனது தலைமீது துன்ப முடியைச்சூடி வருகின்றது. இன்பத்தை வரவேற்பவன் துன்பத்தையும் வரவேற்றே ஆகவேண்டும்.

❖ அரசியல் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம். ஆனால் ஆசைகளுக்கும் சினத்திற்கும் அவன் அடிமையாக இருந்தால் உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை உணரமுடியாது.


❖ தன் விருப்பத்திற்கு உகந்த வேலையாக இருந்தால் எந்த முட்டாளும் அதனைச் செய்து முடிப்பான். ஆனால் எவ்வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவன் எவனோ அவனே அறிவாளி. ஒரு வேலையும் அற்பமானதல்ல.


# வடக்கு மாகாண உதைபந்தாட்ட தொடர்
# புனித பத்திரிசியார், சென் சேவியர் சம்பியன்














வடக்கு மாகாண பாடசாலைகள் விளையாட்டு நிகழ்வின் கால்பந்தாட்ட தொடரில் 18 வயதின் கீழ் பிரிவில் மன்னார் சென் சேவியர் கல்லூரி அணியும், 16 வயதின் கீழ் பிரிவில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அணியும் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளன.

16 வயதின் கீழ் பிரிவு

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இப்பிரிவுக்கான இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியை எதிர்த்து மன்னார் சென்லூஸியா கல்லூரி மோதியது.

**விறுவிறுப்பான போட்டியாக அமைந்த இவ்வாட்டம் ஆரம்பம் முதலே பரபரப்பானது. இளம் வீரர்களின் சிறப்பான ஆட்டம் பார்வையாளர்களை பரவசப்படுத்தியது. போட்டியின் முதற்பாதியின் 14 ஆவது** நிமிடத்தில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி ஏ.பி.திலக்ஷன் மூலம் தனது முதலாவது கோலைப் பெற்றது.

இதன் காரணமாக முதற்பாதி புனித பத்திரிசியார். கல்லூரியின் முன்னிலையுடன் நிறைவுக்கு வந்தது.

எழுச்சியுடன் இரண்டாம்பாதியை ஆரம்பித்த சென் லூஸியா கல்லூரி சிறப்பான ஆட்டத்தை வழங்கியது. எனினும் அவ்வணி வீரர்கள் தமக்குக் கிடைத்த கோல் போடும் சந்தர்ப்பங்களை தவறவிட்டனர்.

எனினும், சிறந்த வீரர்களைக் கொண்ட புனித பத்திரிசியார் கல்லூரி அணியினர் எதிரணியின் ஆட்டத்திற்கு சிறந்த முறையில் ஈடுகொடுத்து ஆடினர்.

**அது போன்றே அவர்களாலும் எந்த ஒரு கோலையும் பெற முடியாமல் போனது.**

**எனவே, இந்த ஆட்ட நேர** முடிவில் 1-0 என்ற கோல் கணக்கில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

மூன்றாம் இடத்திற்கான போட்டி

இப்போட்டியில் கால்பந்தாட்டத்திற்கு பெயர்பெற்ற அணிகளுள் ஒன்றான இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து சுற்றுத் தொடருக்கு முதன் முறையாக நுழைந்து. அரையிறுதியை எட்டிப்பிடித்திருந்த இமையாணன் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய அணி மோதியது.

போட்டியின் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்திய புனித ஹென்றியரசர் கல்லூரி அணிக்கு முறையே 9ஆம், 17ஆம் நிமிடங்களில் டிசாந்த், ஜெலெக்ஸன் ஆகியோர் கோலினைப் பெற்றுக்கொடுத்து அணியை முன்னிலைப்படுத்தினர்.

புனித ஹென்றியரசர் கல்லூரி 2 கோல்களினால் முன்னிலையிலிருக்க ஆரம்பமான இரண்டாம் பாதியில், இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய வீரர்கள் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

முதல் பாதியின் பின்னிலைக்கு பதில்கொடுக்கும் முகமாக அவ்வணியின் டினேஷ், திவான்சுஜன் ஆகியோர் அடுத்தடுத்து கோல்களைப் போட்டு கோல் கணக்கினை சமப்படுத்தினர்.

இந்த இரு கோல்களும் புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. எனவே வெற்றிக் கோலுக்கான முயற்சியில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். எனினும், எதிர்த்தரப்பு அவர்களது கோலுக்கு இடம் கொடுக்கவில்லை. எனவே ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இதன் காரணமாக சமநிலை தவிர்ப்பு உதை (பெனால்டி) வழங்கப்பட்டது. அதில் 4-3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தினை தமதாக்கியது புனித ஹென்றியரசர் அணி.

18 வயதின் கீழ் பிரிவு

அதனைத் தொடர்ந்து 18 வயதின் கீழ் பிரிவுக்கான போட்டிகள் இடம்பெற்றன. மிகச் சிறந்த வீரர்களைக் கொண்ட வயதெல்லையான இப்பிரிவின் இறுதிப் போட்டியில் பலம் மிக்க மன்னார் சென் சேவியர் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதியது. இரு தரப்பினரும் பல வாய்ப்புகளை ஏற்படுத்தியபோதும், வீரர்களின் தவறுகள் மற்றும் எதிரணியின் தடுப்பாட்டம் என்பன காரணமாக முதல் பாதியில் எந்த ஒரு அணியினராலும் கோல்களைப் பெற முடியாமல் போனது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியின் நிலைமை முதல் பாதியை விட முழுமையாக வேறுபட்ட விதத்தில் இருந்தது. இந்த பாதியாட்டத்தின் ஆரம்பத்தில் சென் சேவியர் அணி சற்று பலமான ஆட்டத்தை வெளிப்படுத்தினாலும் சந்தர்ப்பங்கள் பலவற்றை வீணடித்தது.

போட்டியின் இறுதி நிமிடங்களில் வேகமெடுத்த யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்கள் கோல் கம்பம் வரை சென்றும் தமது சந்தர்ப்பங்களை தவறவிட்ட நிலையில் கோல்கள் எதையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதன் காரணமாக வெற்றியாளரை தீர்மானிக்கும் சமநிலை தவிர்ப்பு உதையில் (பெனால்டி) 3-2 என்ற கோல்கள் கணக்கில் மன்னார் சென்.சேவியர் அணி வெற்றி பெற்று 18 வயதின் கீழ் பிரிவில் சம்பியனானது.

மூன்றாம் இடத்திற்கான போட்டி

இப்போட்டியில் யாழ்ப்ப[illegible]ம் புனித பத்திரிசியார் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி செட்டிகுளம் மகா வித்தியாலய அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற முதற்பாதியில் பலமான பத்திரிசியார் கல்லூரி அணிக்கு செட்டிகுளம் மகா வித்தியாலய வீரர்கள் பலத்த அழுத்தம் கொடுத்தனர்.


அவர்கள் பத்திரிசியார் கல்லூரியின் கோல் போடும் முயற்சிகளையும் கட்டுப்படுத்தினர். எதிர்பூர்ப்புக்களுக்கு மத்தியில் ஆரம்பமாகிய முதற்பாதி நிறைவடையும்பொழுது எந்த அணியினரும் கோல்களைப் பெறவில்லை.

அதே விறுவிறுப்புடன் ஆரம்பமான இரண்டாவது பாதியில் அடுத்தடுத்து 3 கோல்களைப் பெற்றது புனித பத்திரிசியார் கல்லூரி.

எனவே, போட்டி முடிவில் அக்கல்லூரி வீரர் கள் மேலதிக 3 கோல்களினால் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை வென்றனர்.

# சமனிலை தவிர்ப்பு உதை முடிவில்
# வடக்கின் வல்லரசனானது றோயல்







குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரின் மாபெரும் இறுதிப் போட்டி 17.05.2017 புதன்கிழமை இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் ஊரெழு றோயல்- பலாலி விண்மீன் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டநேரமுடிவில் போட்டி 3:3 என சமனிலையானதால் சமனிலை தவிர்ப்பு உதைமுடிவில் றோயல் அணி வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கியது.

முற்பாதியாட்டத்தில் 2-0 என முன்னணியில் நின்ற பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் போட்டி முடிவடைய 3 நிமிடங் கள் இருக்கும் போதும் 3-2 என முன்னிலை பெற்று காணப்பட்ட நிலையிலும் இறுதிநேர கோல் மூலம் போட்டியை சமநிலைப்படுத்திய றோயல் சமநிலை தவிர்ப்பு உதை முடிவில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# கொல்கத்தாவை 6 விக்கெட்டுக்களால் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு சென்றது மும்பை இந்தியன்ஸ்




ஐ.பி.எல். குவாலிபையர் 2இல் மும்பை இந்தியன்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி கொல்கத்தா அணியின் சுனில் நரைன், கிறிஸ் லின் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ஆடுகளம் பந்து வீச்சுக்கு அதிக அளவில் ஒத்துழைத்ததால், கொல்கத்தா வீரர்கள் கடுமையான திணறினார்கள்.

பும்ப்ரா, கரண் ஷர்மா அபாரமாக பந்து வீசினார்கள். கொல்கத்தா அணி 18.5 ஓவரில் 107 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கிறிஸ் லின் 4 ஓட்டங்களிலும் சுனில் நரைன் 10 ஓட்டங்களிலும உத்தப்பா ஒரு ஓட்டங்களிலும் கமபீர் 12 ஓட்டங்களிலும் கிராண்ட்ஹோம் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஜக்கி 28 ஓட்டங்களிலும் சூர்யகுமார் யாதவ் 31 ஓட்டங்களிலும் சாவ்லா 2 ஓட்டங்களிலும் குவுல்டர் - நைல் 6 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். மும்பை இந்தியன்ஸ் அணி சார்பில் கரண் ஷர்மா 4 விக்கெட்டும் பும்ப்ரா 3 விக்கெட்டும் ஜோன்சன் 2 விக்கெட்டும் வீழ்த்தினார்கள.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை அணி நான்கு விக்கெட்டுகளை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

மும்பை அணி சார்பாக சிம்மன்ஸ் 3 ஓட்டங்களும் பட்டேல் 14 ஓட்டங்களும் ராயுடு 6 ஓட்டங்களும் ரோகித சர்மா 26 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். குருனல் பாண்டியா 45 ஓட்டங்களும் பொல்லார்ட் 9 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் மும்பை அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. இறுதிப் போட்டியில் ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட அணியுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கரண் ஷர்மா தெரிவு செய்யப்பட்டார்.

# இந்தியாவை வீழ்த்த செல்லவில்லை சம்பியன் டிராபியை கைப்பற்றவே

## இன்சமாம் கருத்து



'இந்தியாவை வீழ்த்துவதற்காக நாங்கள் இங்கிலாந்து செல்லவில்லை சம்பியன்ஸ் டிராபியை வெல்வதற்காக' என்று இன்சமாம் உல் ஹக் கூறியுள்ளார்.

ஐ.சி.சி.யின் சம்பியன்ஸ் டிராபி 50 ஓவர் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் ஜூன் 1ஆம் திகதி தொடங்குகிறது. இன்னும் 11 நாட்களே உள்ள நிலையில் இந்த தொடர் குறித்து பேச்சு தொடங்கியுள்ளது. குறிப்பாக இந்தியா - பாகிஸ்தான் போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற விவாதம் மேலோங்கியுள்ளது.


இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வீரர்களை தேர்வு செய்யும் தேர்வுக்குழுவின் தலைவரான இன்சமாம் உல் ஹக், நாங்கள் இந்தியாவை வீழ்த்துவதற்காக இங்கிலாந்து செல்லவில்லை. கோப்பையை வெல்வதற்காக செல்கிறோம் என்று கூறியுள்ளார்.


இது குறித்து இன்சமாம் உல் ஹக் கூறுகையில் "நாங்கள் இந்தியாவை வீழ்த்துவதற்காக மட்டுமே இங்கிலாந்து செல்லவில்லை. ஆனால் எங்களுடைய முதன்மையான இலக்கு சம்பியன்ஸ் டிராபி தொடரை வெல்ல வேண்டும் என்பதுதான்.

எனது தலைமையிலான பாகிஸதான் அணி 2004ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன்ஸ் டிராபி தொடரில் எட்ஜ்பாஸ்டனில் இந்தியாவை 3 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. அதே மைதானத்தில் தற்போது போட்டி நடைபெற இருக்கிறது. மீண்டும் எங்களால் இந்தியாவ்வை வீழ்த்த முடியும்" என்றார்.

மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் விளையாடும் வீரர்கள் அங்கிருந்து நேரடியாக இங்கிலாந்து செல்ல இருக்கிறார்கள். மீதமுள்ள வீரர்கள் பாகிஸ்தானில் இருந்து இங்கிலாந்து செல்வார்கள்.

# சிறப்பாக பந்து வீசக்கூடிய வலுவான வீரர் மலிங்க - ஜெயசூரிய நம்பிக்கை



பழைய நிலைக்கு திரும்பி சிறப்பான வகையில் பந்து வீசக்கூடிய வலுவான வீரர் மலிங்க என்று சனத் ஜெயசூரிய கூறியுள்ளார்.


இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க. யோர்க்கர் பந்து வீச்சில் வல்லவரான இவர், ஐ.பி.எல். தொடருக்கு முன் நீண்ட காலமாக காயத்தால் ஓய்வில் இருந்தார். இதனால் தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரில் சிறப்பான முறையில் பந்து வீச்சை வெளிப்படுத்த முடியவில்லை.

இந்நிலையில் 35 வயதாகும் மலிங்க மீண்டும் பாஃர்முக்கு திரும்பி, சிறந்த வகையீல் பந்து வீசுவதற்கு போதுமான வலுவான வீரர் என்று சனத் ஜெயசூர்ய கூறியுள்ளார்.

இதுகுறித்து ஜெயசூர்ய கூறுகையில் பாஃர்ம் இழந்து தவிப்பது கிரிகெட்டில் ஒரு அங்கம்தான். என்னுடைய 17-18 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் தொடர்ந்து பாஃர்மில் இருந்த வீரரை நான் பார்த்ததில்லை.

மலிங்க கொஞ்சம் பாஃர்ம் இல்லாமல் தவிக்கிறார். ஆனால் அதில் இருந்து மீண்டு சிறந்த பந்து வீச்சை வெளிப்படுத்துவதற்கான வலுவான வீரர் மலிங்க. இன்றைய (நேற்று) போட்டியில், மும்பை அணி இறுதிப்போட்டிக்கு நுழைந்தால், அந்த அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருப்பார்" என்றார்.

# ஐ.பி.எல். மூலம் ஆட்டத்தை வேறு நிலைக்கு மாற்றிய ஸ்ரோக்ஸ் - வில்லியர்ஸ் கருத்து



ஐ.பி.எல். தொடர் மூலம் இங்கிலாந்து சகலதுறை வீரர் பென் ஸ்ரோக்ஸ் தனது ஆட்டத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றுள்ளார் என்று டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் சகல துறை வீரர் பென் ஸ்ரோக்ஸ், முதன முறையாக ஐ.பி.எல். 2017 தொடரில் கலந்து கொண்டார். ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணிக்காக விளையாடிய அவர், சதம் அடித்ததுடன் 12 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தினார். பெரும்பாலான போட்டிகளில் புனே அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார்.

சம்பியன்ஸ டிராபி தொடருக்காக அனைத்து அணிகளும் தயாராகி வருகின்றன. சம்பியன்ஸ் தொடருக்கு முன்னோட்டமாக தென்னாபிரிக்கா அணி இங்கிலாந்துக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் விளையாடுகிறது.

ஐ.பி.எல். தொடரில் சிறப்பாக விளையாடியதுபோல் ஒருநாள் போட்டியில் பென் ஸ்ரோக்ஸ் சிறப்பாக விளையாடுவார் என்று தென்னாபிரிக்கா அணியின் தலைவர் டி வில்லியர்ஸ் பயப்படுகிறார்.

பென் ஸ்ரோக்ஸ் குறித்து டி வில்லியர்ஸ் கூறுகையில் "பென் ஸ்ரோக்ஸ் தலைசிறந்த வீரர். துடுப்பாட்டம மற்றும் பந்து வீச்சு என இரண்டு துறையிலும் சிறப்பாக செயல்படுகிறார். அவர் உண்மையிலேயே சில சிறப்பான திறமையை பெற்றுள்ளார்.




ஏராளமான வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் தங்களுடைய வழியை தொலைத்துள்ளனர். பலர் அவர்களுடைய ஆட்டம் மூலம் அடுத்த நிலையை தேடியுள்ளனர். பென் ஸ்ரோக்ஸின் ஆட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது அவருக்கு சிறந்ததாக இருக்கும்.

எங்களுடைய சில வீரர்களும் ஐ.பி.எல். மூலம் முன்னேற்றம் பெற்றுள்ளனர். நான் வலைப்பயிற்சியில இம்ரான் தாஹிர் பந்து வீச்சை எதிர் கொண்டேன். அவர பந்து வீச்சில் முன்னேற்றம் கண்டுள்ளார். புதிய சில பந்து வீச்சுக்களை கண்டுபிடித்துள்ளார்" என்றார் டி வில்லியர்ஸ்.

# இருபது - 20 கிரிக்கெட் போட்டிக்கு டக்வோர்த் விதி பொருத்தமற்றது

## பிளமிங் கருத்து



20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் டக்வோர்த் லீவிஸ் விதி முறையை பின்பற்றுவது பொருத்தமற்றது என்று நியூசிலாந்து முன்னாள் அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் கூறியுள்ளார்.

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணியின் வெளியேற்றம் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது பிளே ஓஃப் சுற்றில் கொல்கத்தா - ஹைதராபாத் அணிகள் மோதிய எலிமினேட்டர் ஆட்டம் கடந்த புதன்கிழமை பெங்களூரில் நடந்தது.

முதலில் ஆடிய ஹைதராபாத் 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 128 ஓட்டங்கள் எடுத்தது. கொல்கத்தா ஆட செல்லும் போது மழையால் பாதிக்கப்பட்டது. மழை விட்ட பிறகு விதி மாற்றத்தால் நள்ளிரவு 1 மணிக்கு போட்டி நடத்தப்பட்டது.

டக்வோர்த் லீவிஸ் விதிப்படி 6 ஓவர்களில் 48 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை கொல்கத்தா எளிதில் எடுத்து 'குவாலிபையர் 2' சுற்றுக்கு தகுதி பெற்றது.

நள்ளிரவு 1.30 மணி வரை போட்டியை நடத்தியது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தி உள்ளது. 'பிளே ஓஃப்' சுற்றுக்கான விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டு இருந்தது. இதனால் ஹைதராபாத் அணியின் வெளியேற்றம் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.


இந்த நிலையில் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் டக்வோர்த் லீவிஸ் விதி முறையை பின்பற்றுவது பொருத்தமற்றது என்று நியூசிலாந்து முன்னாள் அணித் தலைவரும் ரைசிங் புனே அணியின் பயிற்சியாளருமான ஸ்ரீபன் பிளமிங் கூறியுள்ளார்.

நான் ஏற்கெனவே 20 ஓவர் போட்டியில் டக்வோர்த் லீவிஸ் விதி பின்பற்றப்படுவதை விமர்சித்து இருந்தேன். தற்போது அதே கருத்தை நான் மீண்டும் தெரிவிக்கிறேன்.

ஒரு நாள் போட்டியில் தொடர் (100 ஓவர்) டக்வோர்த்- லீவிஸ் விதி திருப்திகரமாக இருக்கும். 20 ஓவர் போட்டிக்கு (மொத்தம் 40 ஓவர்) சரியாக இருக்காது. இந்த விதியால் 2 ஆவதாக துடுப்பெடுத்தாடும் அணிக்கு சாதகமாக இருக்கும்.

ஹைதராபாத் - கொல்கத்தா போட்டியில் இது நன்றாக தெரிந்தது. இதனால் 20 ஓவர் ஆட்டத்துக்கு டக்வோர்த்-லீவிஸ் விதி பொருத்தமற்றது என ஸ்ரீபன் பிளமிங் கூறியுள்ளார்.

# உமர் அக்மல், ஜூனைட் கானுக்கு ஒழுங்கீனமாக நடந்ததற்கு அபராதம்





உள்ளூர் போட்டியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட உமர் அக்மல் மற்றும் ஜூனைட் கான் ஆகியோருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அபராதம் விதித்துள்ளது.

பாகிஸ்தான் சீனியர் கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராக திகழ்பவர் உமர் அக்மல். சிறந்த வேகப்பந்து வீச்சாளர் ஜூனைட் கான். இவர்கள் இருவரும் உள்ளூர் கிரிக்கெட் தொடரான 'பாகிஸ்தான் கோப்பை' தொடரில் விளையாடினார்கள்.

ராவல் பிண்டியில் நடைபெற்ற போட்டியின்போது பஞ்சாப் அணியின தலைவராக செயல்பட்ட உமல் அக்மல், ஜூனைட் கான் ஆடும் லெவனில் இடம்பெற்று விளையாடுவார் என்று தெரிவித்தார். ஆனால, அவர் மைதானத்திற்கு வரவில்லை. உடல்நலக்குறைவால் விளையாட வரவில்லை என்று பயிற்சியாளர் மற்றும் முகாமையாளரிடம் தெரிவித்து விட்டதாக கூறினார். அணித் தலைவராகிய என்னிடம் முகாமையாளர் மற்றும் பயிற்சியாளர் ஜூனைட் கான் வராதது பற்றி கூறியதும் ஆச்சரியம் அளித்தது என்று உமர் அக்மல் தனது கவலையை தெரிவித்திருந்தார். இதனால் இருவருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டது.

இந்த பிரச்சினை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. விசாரணை முடிவில் இருவருக்கும் போட்டி சம்பளத்தில் 50 சதவீதம் அபராதமாக



விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இது போன்று சம்பவத்தில் ஈடுபட்டால் ஒரு மாதம் இடை நிறுத்தல் நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டும் என்று எச்சரித்துள்ளது.

உமர் அக்மல் மற்றும் ஜூனைட் கான் ஆகியோர் இங்கிலாந்தில் நடைபெற இருக்கும் சம்பியன்ஸ் டிராபி தொடருக்கான பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முப்படையினரை...

பாடுகளை குறைவின்றி நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பிற்பகல் பாராளுமன்ற மைதானத்துக்கு அருகிலுள்ள படைவீரர் நினைவு தூபி வளாகத்தில் நடைபெற்ற 2017 தேசிய போர்வீரர் நினைவு நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

30 ஆண்டுகளாக நடைபெற்ற போரில் மரணமடைந்த மற்றும் அங்கவீனமுற்ற படையினருக்கான பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை குறைவின்றி நிறைவேற்றுவதுடன், நாட்டின் எதிர்காலத்துக்காக இப்போது பணியாற்றும் முப்படையினருக்கு புதிய தொழில்நுட்பத்துடன், உயர்தர சேவைக்காக தரமுயர்த்தும் பொறுப்பை நிறைவேற்றுவதாகவும் இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் படையினரின் நலன்களுக்காக அரசாங்கம் பல புதிய திட்டங்களை அமுல்படுத்தியதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, படையினருக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தை முறையாகவும் வினைத்திறனாகவும் மேற்கொண்டு அனைத்து படையினருக்கும் வீடுகளை வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் மட்டுமன்றி போதைப் பொருள் ஒழிப்பு உள்ளிட்ட தேசிய திட்டங்களிலும், அபிவிருத்தி திட்டங்களிலும், சமூக நலன்புரி செயற்பாடுகளிலும் படையினர் வழங்கும் பங்களிப்பினை ஜனாதிபதி பாராட்டினார்.

தாய்நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த படையினருக்கு மரியாதை செலுத்திய ஜனாதிபதி, படையினரின் நினைவு தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

மதகுருமார்கள், மாகாண ஆளுநர்கள், மக்கள் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அலுவலர்களும் முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் படை வீரர்களின் குடும்ப உறுப்பினர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

## மன்னார் மாவட்...

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 305, மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட 04 மாடிகளைக் கொண்ட மன்னார் மாவட்ட செயலக கட்டடத்தொகுதியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வைபவ ரீதியாக நேற்றுத் திறந்து வைத்ததுடன், உத்தியோகபூர்வமாக விருந்தினர் பதிவேட்டில் பதிவு செய்து வைத்து பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் நடைபெற்றுள்ளது.

அலுவலகத் திறப்பு விழா நிகழ்வைத் தொடர்ந்து மாவட்டச் செயலக மைதானத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

குடியிருப்புக் காணிகள் இன்றி அரச காணிகளுக்காக விண்ணப்பித்திருந்த ஒரு தொகுதி மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களையும் வழங்கி வைத்துள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான வஜீர அபேவர்த்தன, றிஸாட் பதியுதீன், டி.எம்.சுவாமிநாதன், சாகல ரத்னாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான, சாள்ஸ் நிர்மலநாதன், கே.கே. மஸ்தான், வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் உட்பட மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (செ-15)

## யானை தாக்கி...

தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில், ஐந்து வயது சிறுமியொருவரே உயிரிழந்துள்ளார். சிறுமியின் ஒன்றரை வயது தங்கையும் பாட்டியுமே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாட்டியுடன் பேர்த்திகள் இருவரும் பாலர் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த வேளை வழியில் யானைத் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் மூவரும் அன்தியாகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது ஐந்து வயது சிறுமி உயிரிழந்து விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(செ-11)

## கண்ணாடியிலா...

மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

விகாராதிபதியின் அழைப்பின் பேரில் நேற்று பிற்பகல் விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி வழிபாடுகளில் ஈடுபட்டு, ஆசீர்வாதம் பெற்றார். அதன் பின்னர் நினைவுப் படிகத்தை திறந்து வைத்து, மலர்தூவி வணங்கினார்.

வழிபாட்டுத்தலத்தை நிர்மாணிப்பதற்காக பங்களிப்பு செய்தோருக்கான பரிசில்களையும் ஜனாதிபதி வழங்கினார்.

ஜனாதிபதியினது வருகையை நினைவுகூருமுகமாக விகாராதிபதி வண.கெட்டவல ஹேமாலோக்க தேரரால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. ஜனாதிபதியும் தேரருக்கு நினைவுப் பரிசை வழங்கினார்.

பௌத்த தேரர்கள், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபிள்ளே, கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும, முன்னாள் அமைச்சர் பண்டாரநாயக்க உள்ளிட்ட மாகாண அரசியல் பிரதிநிதிகளும், விகாரையின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினர் மற்றும் பிரதேச பக்தர்களும் இச் சமய நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (செ-11)

## மன்னார் வந்த...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நேற்றைய மன்னார் விஜயத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கறுப்பு கொடி அசைத்து தமது எதிர்ப்பு போராட்டத்தை அங்கு மேற்கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்ட செயலக புதிய கட்டடத்தை திறந்து வைப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் ம்ன்னார் மாவட்டத்துக்கு சென்றிருந்தார். அவர் காலை 9 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெறும் இடத்துக்கு சென்றவேளை நிறுவப்பட்டிருந்த பாரிய பாதுகாப்புக்களையும் மீறி காணாமல் போனவர்களுடைய உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மன்னாரில் நேற்றைய தினம் குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளது என அறிந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள், பிரதமரை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னதாக மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் அனுமதி கேட்டிருந்தனர். ஆனால் அதற்கு அரச அதிபர் அனுமதி வழங்காத காரணத்தால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றைய தினம் மன்னார் மாவட்ட செயலக முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிகழ்வினை ஆரம்பிப்பதற்கு தேசிய கொடியினை பிரதமர் ஏற்றிய போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்பு கொடியினை அசைத்தவாறு கோஷம் எழுப்பியிருந்தனர்.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளை உள்ளே அழைத்து பிரதமர் ரணிலினுடைய பிரதிநிதி ஒருவரும், பாதுகாப்பு அமைச்சின் செயலர், அமைச்சர் றிஸாட் பதியுதீன், ஆகியோர் கலந்துரையாடியிருந்தனர்.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களினுடைய உறவுகளின் பிரதிநிதிகள் தமது கோ[illegible]க்கைகள் உள்ளடங்கிய மகஜரினை கையளித்துள்ளனர். (செ-9)


### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 22.04.2017 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி



**திருமதி யோகவதி செல்வரட்ணம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.05.2017) சனிக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (22.05.2017) திங்கட்கிழமை மதியம் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

48/5 முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்: குடும்பத்தினர்
தொ.பே: 0773405484

(8681)

**PERSONAL GROUP CLAS**

இரசாயனவியல் (A/L) 2017, 2018, 2019 Repeat Batch 37 வருட Past Papers கற்பிக்கப்படும்
சி.அங்கதன் B.Sc (Chem.Spl)
தொடர்பு: 0779208945
(C-8676)

**FALC FRENCH LANGUAGE CENTRE**
பிரெஞ்சு வகுப்புக்கள்
2006 முதல் இன்றுவரை 1261 மாணவர்கள்
இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 03.06.2017 சனி 8.00 0779 789 456 021 221 7781
No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 29.05.2017 பி.ப. 4.00 021 320 2973
IELTS Life Skills A1, B1 வகுப்புக்களும்.....
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் (முன்பாக)
(அ-8547)

**விற்பனைக்கு**

ஜேர்மன் செப்பட் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0774121681
(8673)

**வாடகைக்கு**

3-ம் ஒழுங்கை அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0776044227, 0770491513

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(அ-8564)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா
(அ-8590)

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 5Kg மேற்பட்ட பொதி 800/=
UK - 11 Kg மேற்பட்ட பொதி 500/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் Pvt (Ltd)
T.P:- 077 755 4528
யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி பருத்தித்துறை, சங்கானை, கிளிநொச்சி

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனத்துக்கு
01.Accounting Staff (MS Office, MS Excel, Quick Book) தெரிந்தவர்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு:
KINGS ELECTRONICS (PVT) LTD
No.12, Point Petro Road, Jaffna.
(C-8619) T.P : 021 454 6699


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.